பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 19 புதன்கிழமை 02.05.2018 கதிர் 177

அல்ல!

அமைச்சரவை மறு சீரமைப்பு நேற்றுடன் ஒப்பேறி விட்டது என்று தான் பலரும் கருதுகின்றார்கள்.

ஆனால் உண்மையில் விவகாரம் அப்படி இல்லையாம்.

*"திருவிழா இப்போதுதான் தொடங்கியிருக்கின்றது. இனித்தான் சூடு பிடிக்கும். கொஞ்சம் பொறுத்திருங்கள்.*

பக்கம் 03 ›››

# சமஷ்டித் தீர்வு இவ்வாண்டில் கிட்ட வேண்டும்

## மே தினப் பிரகடனத்தில் கூட்டமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 02

**இனப் பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்றை மிக விரைவில் - இந்த ஆண்டுக்குள் - ஏற்படுத்த வேண்டுமென அரசிடமும், அரசியல் கட்சிகளிடமும், அனைத்துச் சமூகங்களிடமும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமும் இந்த மே தினம் ஊடாகக் கோரி நிற்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.**

அந்த அரசியல் தீர்வானது ஒருமித்த இலங்கை நாட்டில் தமிழ் மக்களின் இறையாண்மை, சுயநிர்ணய உரிமை, மனித உரிமை, வாழும் உரிமை அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பில் பிராந்தியங்களினதும் தேசிய இனங்களினதும் தன்னாட்சி உரித்தை உறுதிப்படுத்தும் வகையில் அமையவேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

பக்கம் 03 ›››

## வடக்கு அமைச்சுக்கு எதிராக பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்!



யாழ்ப்பாணம், மே 02

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாகப் பட்டதாரிகள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை

பக்கம் 04 ›››

## ஜே.வி.பியின் மே தினத்தில் சுமந்திரன் எம்.பி. பங்கேற்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 02

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) ஏற்பாட்டில் தொழிலாளர்

பக்கம் 03 ›››

## பொன்சேகாவுக்கு பெரும் ஏமாற்றம்



கொழும்பு, மே 02

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படுமென எதிர்பார்த்திருந்த சட்டம் ஒழுங்கு அமைச்சு, ரஞ்சித் மத்

பக்கம் 14 ›››

## அதிரடி மாற்றங்களுடன் அமைச்சரவை பதவியேற்பு



கொழும்பு, மே 02

இலங்கை அரசியலிலும் மக்கள்மத்தியிலும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த அமைச்சரவை மறுசீரமைப்பு மே தினமான

பக்கம் 04 ›››

## விளையாட்டு அமைச்சராக பைசர் முஸ்தபா



கொழும்பு, மே 02

விளையாட்டுத்துறை அமைச்சராக பைசர் முஸ்தபா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பக்கம் 04 ›››

## நடன ஆசிரியை மீது தாக்குதல்; விசாரணையில் புதிய தகவல்!

யாழ்ப்பானம், மே 02

நடன ஆசிரியையின் சகோதரியின் குடும்ப விடயத்தில் தலையிடக் கூடாது என ஈ.பி.டி.பி.

பக்கம் 14 ›››

## விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு உயர்கல்வி அமைச்சுப் பதவி



கொழும்பு, மே 01

முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, உயர் கல்வி மற்றும் கலாசார

பக்கம் 14 ›››

## மனோவின் கையில் நல்லிணக்க அமைச்சு



ஜனாதிபதியின் பொறுப்பிலிருந்த தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சுப் பதவி

பக்கம் 14 ›››

## புலிகளின் எழுச்சிப் பாடல்களுடன் கூட்டமைப்பின் மே தினப் பேரணி



யாழ்ப்பாணம், மே 02

தமிழீழ விடுதலை புலிகளின் எழுச்சிப் பாடல்கள் ஒலிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினப் பேரணி நெல்லியடியில்

பக்கம் 14 ›››

## வடக்கின் அபிவிருத்திக்கு தனியமைச்சு உருவாக்கம்

### அமைச்சராக சுவாமிநாதன்



வடக்கு மாகாண அபிவிருத்தி என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு அதன் அமைச்சராக டி.எம். சுவாமிநாதன்

பக்கம் 14 ›››

## நினைவாலயத்துக்குத் தடை அடிப்படை உரிமை மீறலே

### சுரேஷ் பிறேமச்சந்திரன் கண்டனம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 02

யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைப்பதைத் தடை செய்வது அடிப்படை உரிமை மீற

பக்கம் 14 ›››

## யாழ். இளைய தலைமுறையினரின் வாழ்வைப் பாழாக்கும் பொலிஸார்

### மூத்த சட்டத்தரணி நீதிமன்றில் சமர்ப்பணம்

யாழ்ப்பாணம், மே 02

வாள்வெட்டுக் கும்பலில் தொடர்புபடாத 17 வயது இளைஞனை சந்தேகநபராகக் கைது

பக்கம் 04 ›››

## மோசடிகளுக்காக சட்டத்தின் முன் பதிலளிக்கவேண்டும் யாழ்.மேயர்

### மணிவண்ணன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், மே 02

யாழ். மாநகர சபை முதல்வர் சபைச் சட்டதிட்டங்களை மீறிச் சபையின் அங்கீகாரம் இல்லாமல் தன்னிச்சையாக மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் மோசடிச் செயற்பாடுகளாகவே

பக்கம் 14 ›››

## பிரதி, இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் இன்று

கொழும்பு, மே 02

பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் இன்றுவழங்கப்படும் என ஜனாதிபதி செயலகம்

பக்கம் 14 ›››

## பிள்ளைகள் இருவருக்கும் நஞ்சு கொடுத்து தானும் தற்கொலைக்கு முயற்சித்த தந்தை!

### காப்பாற்றப்பட்டு மூவரும் வைத்தியசாலையில்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 02

சின்னஞ் சிறார்களான பிள்ளைகளையும் கொன்று தானும் தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார் குடும்பத் தலைவர் ஒருவர். அவர்கள் மூவரும் யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவத் துறையினரின் பெரும் போராட்டத்தின் பின் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

பக்கம் 14 ›››

காலைக்கதிர் Kalaikkathir


# திருகோணமலையில் படையினருக்கு பயிற்சியளிக்கும் அமெரிக்க கடற்படை

கொழும்பு, மே 02

பசிபிக் ஒத்துழைப்பு-2018 திட்டத்தின் கீழ், திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்துள்ள அமெரிக்க கடற்படையின் மருத்துவமனைக் கப்பலான யு.எஸ்.என்.எஸ். மேர்சி, இலங்கைப் படையினருக்குப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நிற்கும் யுஎஸ்என்எஸ் மேர்சியில் உள்ள, அமெரிக்க கடற்படையின் கடல் தாக்குதல் உலங்குவானூர்தி அணியைச் சேர்ந்த, எம்.எச்- 60 சீஹோக் உலங்குவானூர்திகளின் மூலம், மீட்பு உத்திகள் தொடர்பாக இலங்கைப் படையினருக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.





அனர்த்த மீட்பு பணிகளில் போது, பாதிக்கப்பட்டவர்களை மீட்பது தொடர்பான பயிற்சிகள்இதன்போது அளிக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, யுஎஸ்என்எஸ் மேர்சி மருத்துவமனைக் கப்பலில் உள்ள கடற்படை மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள், இலங்கை படை மருத்துவர்களுக்கான பயிற்சிகளையும் அளித்து வருகின்றனர்.

மேலும், பொதுமக்களுக்கான மருத்துவ முகாம்களையும் நடத்தி வருகின்றனர். பாடசாலைகள் மற்றும் பொது இடங்களைத் துப்புரவு செய்தல், போன்ற சமூகப் பணிகளையும் மேற்கொள்வதுடன் விளையாட்டுகளிலும் அமெரிக்க கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல்கால பெறுபேறுகளைக் கொண்டு

## மக்களின் அபிலாஷைகளை புறந்தள்ளப் போவதில்லை!




வவுனியா, மே 02

கடந்த காலங்களில் எமது மக்களுக்கு சரியான அரசியல் வழிநடத்தல் கிடைத்திருந்தால் நிச்சயமாக ஒளிமயமான வாழ்க்கை நிலையை அடைந்திருப்பர்.

ஆனால் தவறான அரசியல் தலைமைகளிடம் தமது அரசியல் அதிகாரங்களை தமிழ் மக்கள் கொடுத்து வந்துள்ளமையால்தான் இன்றும் சிறந்த வாழ்க்கை நிலையை அடையமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள் இருக்க வேண்டியுள்ளது என ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்திற்கான விஜயம் ஒன்றை நேற்றையதினம் மேற்கொண்டுள்ள செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இந்த மாவட்ட நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த மாவட்டத்தின் தேர்தல் கால பெறுபேறுகளை கொண்டு நாம் எமது மக்களது அபிலாஷைகளை ஏமாற்றவோ புறந்தள்ளவோ விரும்பவில்லை. அத்துடன் ஒருபோதும் போலித் தேசியவாதம் பேசி நடைமுறை சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கி மக்களை நடுவீதியில் விடவும் நாம் தயாரில்லை.

எமது மக்களுக்கு சுபீட்சமானதும் அமைதியானதுமான வாழ்க்கை நிலையை உருவாக்கிக் கொடுப்பதற்கான சரியான பாதையை இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து எடுத்துக் கூறிவருகின்றோம். அந்த வகையில் மக்களின் வளமான எதிர் காலத்துக்கு சரியான தலைமைத்துவத்தை கொடுக்க நாம் தயாராக இருக்கின்றோம்.

கடந்தகாலங்களில் யுத்தத்தை நடத்திய யுத்தத்தை வென்ற அரசுகளுடன் நான் இணக்க அரசியலை மேற் கொண்டு மக்களுக்கு பலவிதமான அபிவிருத்தி சார்ந்த பணிகளை முன்னெடுத்திருக்கின்றேன்.

அந்தவகையில் சக தமிழ் அரசியல் தரப்பினரது அரசியல் முன்னெடுப்புகள் யாவும் தோல்வி கண்டு வருகின்றமைக்கு அவர்களது தவறான வழிநடத்தலே காரணமாக இருந்துள்ளது என்பதை இன்றுள்ள அரசியல் நிலைமைகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றதை இன்று மக்கள் உணர்ந்துள்ளனர்.

அந்தவகையில், கடந்த கால அனுபவங்களிலிருந்துதான் எதிர்கால வாழ்வு நிச்சயம் செய்யப்படுகின்றது என்பதற்கிணங்க இம்மாவட்டத்தினதும் மக்களதும் வளமான வாழ்வியல் முன்னேற்றத்திற்காக எமது கட்சியின் கொள்கை வழிநின்று மக்கள் பணிகளுக்காக உறுதியுடன் உழைப்போம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கு)

## முதிரை மரக் குற்றிகளுடன் கிளிநொச்சியில் 7 பேர் கைது

முல்லைத்தீவு, மே 02

கிளிநொச்சி, கட்டைக்காடு பகுதியில் முதிரை மரக் குற்றிகளுடன் ஏழு பேர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் மற்றும் அதற்கு வழிகாட்டியாக இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையுடன், அதனைத் தொடர்ந்து சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## பஸ் கட்டணம் அதிகரிக்க வாய்ப்பு



கொழும்பு, மே 02

பஸ் கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என இலங்கை பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நூற்றுக்கு 10 வீத உடனடி பஸ் கட்டண அதிகரிப்பு ஒன்று அத்தியாவசியமாக உள்ளதென சங்கம் குறிப்பிட்டுள்ளது. ரூபாயின் வீழ்ச்சி காரணமாக பஸ் போக்குவரத்துத் துறையை முன்னெடுப்பதில் பெரிய அழுத்தம் ஏற்பட்டுள்ளது என சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பஸ் இறக்குமதி மற்றும் மேலதிக பகுதி கொள்வனவு விலைகள் அதிகரிக்கும் என்பதனால் பஸ் தொழில் துறைக்கு பெரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ரூபாய் வீழ்ச்சிக்கு மத்தியில் பஸ் இறக்குமதியின் போதுசெலவிடப்படும்பணம் 2 லட்சம் ரூபாயை விடவும் அதிகம்.

அதற்கமைய ஜூலை மாதம் முதலாம் தினம் மேற்கொள்ளப்படவுள்ள வருடாந்த பஸ் கட்டண திருத்தத்தின் போது நூற்றுக்கு 10 வீத அதிகரிப்பு ஒன்று அத்தியாவசியம் என்றும் கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரித்து வரும் நிலையில், பஸ் கட்டணத்தின் பெறுமதியும் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கண்டி, மே 02

கண்டி வில்லியம்கோபல்லா மாவத்தையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டமையால் மோட்டார் சைக்கிளில் சென்ற 38 வயதான நபர் படுகாயமடைந்த நிலையில் கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தவறுக்கு வருந்துகிறோம்

நேற்றைய (01/05/2018) காலைக்கதிரில்- 08 ஆம் பக்கத்தில் " **வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம், கடைகளை வாடகைக்கு வழங்குதல்-2018**" என்ற தலைப்புடன் கேள்வி அறிவித்தல் வெளியாகி இருந்தது.

அந்தப் பிரதேச சபை தவிசாளர் என்ற வகையில் திரு.த.நடனேந்திரனின் பெயர், அந்த விளம்பரத்தின் மூலப் பிரதியில் சரியாகவே குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் விளம்பர பிரசுரத்தில் சிறு தவறு ஏற்பட்டு விட்டது. திரு.த.நடனேந்திரன் என்பதற்குப் பதிலாக திருமதி த.நடனேந்திரன் என அச்சாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

-ஆசிரியர்.

# மாற்றுத் தலைமைகள் ஒன்றாவதை தடுப்பதற்குப் பாரிய சதி முயற்சிகள்

## மே தினக் கூட்டத்தில் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 02

**தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கவும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைப்பதற்கும் நேர்மையாகவும், கொள்கை ரீதியாகவும் தேச விடுதலையை நோக்கி நகரக்கூடிய மாற்றுத் தலைமைகள் ஒன்று சேர்வதைத் தடுப்பதற்குப் பாரிய சதி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

**- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**

இனப்படுகொலைக்காக நீதியும், நிரந்தர அரசியல் தீர்வும் சமாந்தரமாகக் கிடைப்பதே தமிழ்த் தேசத்தின் இருப்பை உறுதிப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

நேற்று மாலை நல்லூர் கிட்டுப்பூங்கா வளாகத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு ஒரே ஒரு வழி ஐ.நாவின் பாதுகாப்புச் சபை ஊடாகச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அரசை நிறுத்துவது மட்டும்தான். இதற்கு முதல் தடையாக உள்ளது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு வருட கால அவகாசத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் எழுத்து மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

குறிப்பாக வழங்கப்பட்ட இரண்டு ஆண்டு கால அவகாசத்தில் இலங்கை அரசு பொறுப்புக்கூறல் தொடர்பில் எந்த ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மீதம் உள்ள ஒரு வருடத்திலும் முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதில்லை என்றும் தெளிவாகக் கூறியுள்ளார்.

இந்த நிலையில் தமிழ் மக்களுக்கான பேரம்பேசும் சக்தியை இழந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குள் முடக்குவதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொறுப்புக்கூறலை இல்லாமல் செய்வதற்கும் ஐ.நாவுக்குச் சென்று இலங்கை அரசுக்கு மீதமாக உள்ள ஒரு வருட கால அவகாசத்தை வழங்க வேண்டும் என்றும் கோரி, அரசை வெளிப்படையாகவே காப்பாற்றியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளான இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோர் தமிழ் மக்களை முட்டாள்கள் என நினைத்துக் கொண்டு தமிழ் இனத்திற்குச் செய்த துரோகங்களில் இதுவும் ஒன்று.

இந்த மேதினக் கூட்டம் தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பான முடிவுகளை எடுக்கும் கூட்டமாக இருக்கவேண்டும். தமிழ் மக்களின் ஏமாற்றங்களை வெளிப்படுத்தி, மக்களின் எதிர்கால விடிவிற்காக - பொறுப்புக்கூறலுக்காக - ஆக்கபூர்வமாக எதிர்காலத்தை ஏற்படுத்துகின்ற அத்திவாரமாக இந்தக் கூட்டம் அமைய வேண்டும். - என்றார். (ஐ-7)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*ஓரிரு நாள்களில் பல விடயங்கள் அம்பலத்துக்கு வரும்."* - என்று ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புடைய ஊடகவியலாளர் ஒருவர் கூறுகின்றார்.

டிக்கோயாவில் நேற்று ஊடகவியலாளர்களுடன் பேசிய ஆறுமுகம் தொண்டமான் *"அமைச்சர் பதவியை ஏற்கும்படி ஜனாதிபதி பல தடவைகள் கேட்டுவிட்டார். இன்று (நேற்று) மாலை ஹட்டனிலிருந்து கொழும்பு புறப்படுகிறேன். கொழும்பு போய்ச் சேர்ந்ததும் அமைச்சர் பதவியை ஏற்பதா என்பது தொடர்பில் நாளை (இன்று) ஒரு திட்டவட்டமான - தீர்க்கமான - முடிவை எடுப்பேன்."* - என்று கூறியிருக்கின்றார்.

அரசுத் தரப்பிலிருந்து விலகிய 16 சு.கவின் எம்.பிக்களின் அறுவர் முன்னாள் அமைச்சர்கள். அவர்கள் பதவி விலகியமையால் வெறிதான அமைச்சுக்கள் சு.கவின் ஏனைய அமைச்சர்களிடமும், ஓர் ஐ.தே.க. அமைச்சரிடம் தற்காலிகமாக பகிர்ந்தளிக்கப்பட்டன. அவை இன்னும் நிரந்தரமாக யாரிடமும் கையளிக்கப்படவில்லை. எனவே இன்னும் மறுசீரமைப்புக்கு இடம் இருக்கின்றது போலும்.

சு.க. செயலாளர் அமைச்சர் துமிந்த திஸநாயக்காவும், பொது மக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளர் மஹிந்த அமரவீரவும் ஜனாதிபதிக்கு மிகுந்த நெருக்கமானவர்கள் என்று இதுவரைக் கருதப்பட்டது. அமைச்சுப் பதவிகளிலிருந்தும் அரசுத் தரப்பிலிருந்தும் விலகிய சு.கவின் 16 எம்.பிக்களும் இந்த இருவரிடமும் இருந்து சம்பந்தப்பட்ட செயலாளர் பதவிகள் பறிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர் என்பது தெரிந்ததே.

நேற்றைய அமைச்சரவை மாற்றத்தின் போது இந்த இரண்டு பேரினதும் அமைச்சுக்களை அவர்களின் விருப்புக்கு மாறாகவே மாற்றி ஒரு 'ஷொட்' கொடுத்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால என அந்த ஊடகவியலாளர் கூறுகின்றார்.

இருவரும், ஐ.தே.கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அதிக ஆதரவு காட்டிச் செயற்படுகின்றனர் என்றும் -

அது பிடிக்காததால் தமது அதிருப்தியை இப்படி ஒரு 'குட்டு' வைத்து ஜனாதிபதி வெளிப்படுத்தியிருக்கின்றார் என்றும் -

அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

அடுத்து வரும் நாள்களில் மேலதிக அமைச்சர்கள் நியமனம் மற்றும் அமைச்சுகள் ஒதுக்கீடுகளை ஒட்டி கொழும்பு அரசியலில் பல அதிர்வேட்டுகள் வெடிக்கலாம் போலும்.

ஆறுமுகம் தொண்டமானுக்கு இடமளித்தால் பதிலுக்குத் திகாம்பரம் தரப்பு கெம்பி எழும்.

அதுபோல பல ஏட்டிக்குப் போட்டி அரசியல் சுவாரஸியங்கள் காத்திருக்கின்றன என்கிறார் அந்த ஊடக நண்பர்.

பொறுத்திருந்துதான் பார்ப்போமே!

- மின்னல் -

### ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினப் பேரணி யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

இதில் ஜே.வி.பியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் பொது அமைப்புக்கள் சிலவற்றின் பிரதிநிதிகள் ஆகியோருடன் பொது மக்கள் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் ஆரம்பமான பேரணி கோயில் வீதி - வைத்தியசாலை வீதி - சத்திரச்சந்தியை அடைந்து கே.கே.எஸ் வீதி ஊடாக யாழ்ப்பாண மாநகர சபை மைதானத்தை வந்தடைந்தது. அங்கு தொழிலாளர் தினக் கூட்டம் இடம்பெற்றது.

மே தின நிகழ்வுகளை இம்முறை மே மாதம் 7ஆம் திகதிக்கு அரசு மாற்றியிருந்த போதும் வடக்கில் பல்வேறு மே தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (ஐ-7)

## இறந்துவிட்டார் பிரபாகரன்

### தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஆனந்தராசா தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறந்துள்ளமையால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழியில் தமிழ் மக்கள் தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

- இவ்வாறு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆனந்தராசா நேற்றைய மேதினக் கூட்டத்தில் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டம் நல்லூர் கிட்டுப் பூங்காவில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்படக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். அங்கு உரையாற்றுகையிலேயே ஆனந்தராசா மேற்கண்டவாறு கூறினார்.

பிரபாகரன் இறந்து விட்டார் எனக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் தெரிவித்தமை அங்கிருந்த கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியிருந்ததுடன் ஆனந்தராசா மீது கடுமையான விமர்சனத்தையும் தோற்றுவித்தது. (ஐ-7)

## புதிய அரசமைப்புச் சட்டத்தை விரைவாக உருவாக்கவேண்டும்

### மே தினச் செய்தியில் சம்பந்தன்

நிலையான சமாதானம், சுயகௌரவம், பொருளாதார மேம்பாடு, அனைவரையும் சமமாக நடத்துதல் போன்ற விடயங்கள் நடைபெறப் புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

உழைப்பின் மகத்துவத்தைப் போற்றும் சர்வதேசத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் காணப்படும் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகள், நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பில் காணப்படாமை கவலைக்குரிய விடயமென அவர் மேலும் கூறினார்.

நாட்டுமக்களைச்சமமாகவும், சுயகௌரவத்துடன் நடத்துவதற்கும் கடந்த காலங்களில் கிடைத்த பல்வேறு வாய்ப்புக்கள் நழுவிச் சென்றுள்ளன. இந்நிலையில், தற்போது கிடைத்துள்ள மற்றுமொரு வாய்ப்பையும் இழந்துவிடக்கூடாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, பொருளாதாரப் பின்னடைவுக்குக் காரணமான விடயங்களை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்குப் போதிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, எதிர்காலச் சந்ததியின் நலனைக் கருத்திற்கொண்டு, தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணக் கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் அணி திரள வேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சிறுமிக்குக் கொடுமை; நான்கு சிறுவர்கள் கைது

கொழும்பு, மே 02

13 வயதுச் சிறுமியை நிர்வாணமாக்கி, காணொலிப் பதிவு செய்த நான்கு சிறுவர்களை விசாரணைக்கு உட்படுத்தும் பொருட்டுத் தாம் கைது செய்துள்ளனர் என கம்புறுப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் நண்பர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தமது மடிக்கணினிக்கு வீடியோ கேம் ஒன்றை தரவேற்றிக் கொள்வதற்காகச் சென்ற சமயத்தில், அந்த நான்கு சிறுவர்களும் (13 முதல் 16 வயதுக்குட்பட்டவர்கள்) தனது ஆடைகளைக் களைந்து, தனது மடிக்கணனியிலேயே தன்னைக் காணொலியில் பதிவு செய்தனர் என அந்தச் சிறுமி பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் யாரிடமாவது தெரிவித்தால் தாக்குதல் நடத்துவோம் என அந்தச் சிறுவர்கள், தம்மை எச்சரித்தனர் எனவும் சிறுமி கூறினார்.

எனினும் இந்தச் சம்பவம் தொடர்பில் சிறுமி தனது பெற்றோருக்கு தெரியப்படுத்திய நிலையில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுவர்களிடம் இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்ற நிலையில், சிறுமி வைத்தியப் பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ)

### சமஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினப் பிரகடனத்தில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதனை நெல்லியடியில் நடந்த கூட்டமைப்பின் மேதினக் கூட்டத்தில் அதன் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் வாசித்தார். (பிரகடனத்தின் முழு விவரம் 6ஆம் பக்கத்தில்)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தள்ளாடும் பொருளாதாரம்

நாட்டின் பொருளாதார நிலைமை பலரின் சிந்தனைக்கும் கவலைக்கும் உள்ளாகியிருக்கின்றது.

எரிவாயு விலை அதிகரிப்பை அடுத்து உணவுப் பொருள்கள், பேக்கரித் தயாரிப்புகள் எகிறத் தொடங்கிவிட்டன.

அடுத்து வரிசையில் பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரிப்புக் காத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

நேற்றைய அமைச்சரவை மறுசீரமைப்பின் பின்னர் இன்று கூடவிருக்கும் புதிய அமைச்சரவைக் கூட்டத்தில் எரிபொருள் விலை நிர்ணயம் தொடர்பான புதிய சூத்திரம் குறித்து ஆராயப்படும் எனக் கூறப்படுகிறது.

எரிபொருள் விலை அதிகரிப்புடன் மேலும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

போதாக்குறைக்கு பால்மா விலைகளும் எதிர்பாராத அளவுக்கு உயரும் என ஆருடம் கூறப்படுகின்றது. உலக சந்தையில் பால்மா வகைகளின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் அதற்கு நிகராக – ஏற்ப – உள்நாட்டிலும் பால்மா விலைகளை அதிகரிக்க முடியாத நிலையில், பால்மா இறக்குமதி தடைப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. அவை மீண்டும் இறக்குமதியாகத் தொடங்கி, சந்தைக்கு வரும்போது அவற்றின் விலை எட்ட முடியாத உச்சத்துக்கு நகர்ந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கடந்த 16 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் மோசமாகப் பாதித்தது – படுத்தது – கடந்த ஆண்டில்தான் என்று மத்திய வங்கியின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அதன் தொடர்ச்சியாக இவ்வாண்டில் நிலைமை மோசமான கட்டத்தை அடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

2001 ஆம் ஆண்டில் யுத்தம் மோசமான கட்டத்தை அடைந்து, கட்டுநாயக்கா விமான நிலையம் மற்றும் விமானப் படைத்தளம் ஆகியன புலிகளால் தாக்கியழிக்கப்பட்டதன் தொடராகச் சுற்றுலாத்துறையும் பிற பொருளாதார நடவடிக்கைகளும் சரிந்து போனமையை அடுத்து நாட்டின் பொருளாதாரம் அப்போது கவிழ்ந்தது. அதன் பின்னர் அதே நிலைமை இப்போது வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டு குறைந்தபட்சம் 3.6 வீத பொருளாதார வளர்ச்சியாவது கிட்டும் என மத்திய வங்கி எதிர்பார்த்தது. ஆனால் அது 3.1 வீதமாகவே இருந்தது என அதன் புள்ளி விவரங்கள் இப்போது எடுத்தியம்புகின்றன.

ஒரு புறம் கடுமையான வறட்சி, மறுபுறம் இயற்கைப் பேரழிவுகளால் விவசாயம் மற்றும் தொழில்துறைகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு ஆகியன காரணமாக இந்தப் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது எனக் கூறப்பட்டாலும், அதன் விளைவுகள் அப்பாவிப் பொதுமக்கள் மீதே கட்டியழிக்கப்படப் போகின்றன என்பது மறுக்கப்பட்ட முடியாத உண்மையாகும்.

ஒரு பக்கம் பொருளாதார வீழ்ச்சி என்றால் மறுபக்கத்தில் நாட்டின் நாணயத்தின் பெறுமதி சரிந்து வருகின்றது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 160ஐ எட்டியுள்ளது. இதனைத் தொடர்ந்து இறக்குமதிகளினால் பெரும் பாதிப்பு விளையப் போகின்றது.

கடந்த ஒரு வார காலத்தில் ஏற்பட்ட பணவீக்கத்தினால் மட்டும் இலங்கை செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடனின் பெறுமதி 4 ஆயிரத்து 700 கோடி ரூபாவால் அதிகரித்து விட்டது என முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் சுட்டிக்காட்டிக் கவலை வெளியிட்டுள்ளார்.

இதேசமயம், செலவுகளைச் சமாளிப்பதற்காக அரசு கண்மூடித்தனமாக புதிய நாணயத் தாள்களை அச்சிட்டுத் தள்ளுவதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் மட்டும் ஆயிரம் கோடி ரூபா பெறுமதிக்கு புதிய நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளனவாம்.

அரசின் செலவீனம் மற்றும் அரச ஊழியர் சம்பளம் உள்ளிட்ட பல்வேறு கொடுப்பனவுகளைச் சமாளிக்கவே இந்த நடவடிக்கை என்கின்றது எதிரணித் தரப்பு.

இந்த நடவடிக்கையினால் எதிர்வரும் நாள்களில் டொலரின் பெறுமதி மேலும் அதிகரிக்கும். இலங்கை நாணயத்தின் பெறுமதி மேலும் வீழ்ச்சியுறும் என்று அபாயச் சங்கு ஊதப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு வழங்கவுள்ள அடுத்த கட்ட கடன் உதவி, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு விட்டமை தொடர்பான அடுத்த கட்டக் கொடுப்பனவு ஆகியன அரசுக்குக் கிடைக்கவிருக்கின்றமையால் இந்த பணவீக்கத்தை குறுகிய காலத்துக்குக் கட்டுப்படுத்தப்படலாம் எனப் பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால், அதன் பிறகு என்ன என்பதே கேள்வி.

புதிய பொருளாதார எழுச்சியை ஏற்படுத்துவோம் என்று கூளுரைத்து அதிகாரத்துக்கு வந்த நல்லாட்சி அரசும் அதன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், நான்கு, ஐந்து தடவைகள் அமைச்சரவையை மாற்றியமைத்து, சீரமைத்தமைதான் மிச்சம். பொருளாதாரம் மட்டும் இங்கு இறங்குமுகமாகத் தான் இருக்கின்றது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து பொலிஸார் விளக்கமறியலில் வைத்துள்ளனர். யாழ்ப்பாணத்தின் இளைய தலைமுறையினரின் வாழ்வைப் பாழாக்கும் வகையில் பொலிஸாரின் செயற்பாடுகள் அமைகின்றன. பொலிஸாரின் இத்தகைய செயற்பாடுகளை நீதிமன்றம் தலையிட்டு – அதில் சிறப்புக் கவனம் செலுத்தி தடுத்து நிறுத்தவேண்டும்

– இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார் மூத்த சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம்.

சட்டத்தரணிகளால் முன்வைக்கப்படும் சமர்ப்பணங்களை இந்த மன்று கவனத்தில் எடுத்து, பலரை விடுவித்தது. அதனால் எல்லோருமே அப்பாவிகள் என்று எடுத்துக் கொள்ள முடியாது. நவீன தொழிநுட்ப யுகத்தில் சி.சி.ரி.வி. காணொலிப் பதிவுகள் மூலம் பலரின் குற்றங்கள் நிரூபிக்கப்படுகின்றன. சி.சி.ரி.வி. காணொலிப் பதிவுகளைப் பார்க்கின்ற போது, பல இளைஞர் எவ்வாறு செயற்படுகின்றனர் என்பது வெளிப்படுகிறது என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்தியில் உள்ள ஹாட்வெயார் ஒன்றின் மீது கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி பிற்பகல் அடாவடிக் கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியிருந்தது.

தாக்குதலையடுத்து 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 4 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனைய நான்கு பேரும் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொக்குவில் சந்தியில் நண்பனின் பிறந்த நாளைக் கேக் வெடிக் கொண்டாடியபோது ஏற்பட்ட தகராறை அடுத்தே ஹாட்வெயார் மீது தாக்குதல் நடத்தினோம் எனச் சந்தேகநபர்கள் தெரிவித்தனர் எனப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர்.

சந்தேகநபர்கள் 4 பேரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

2ஆவது சந்தேகநபர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி வி.ரி.சிவ லிங்கம் மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

எனது கட்சிக்காரர் 17 வயதுடைய இளைஞன். அவருக்கும் இந்த வன்முறைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. பொலிஸார் எனது கட்சிக்காரர் மீது வேண்டும் என்றே குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். முதலாவது சந்தேகநபர் யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரியில் பயின்று, சாதாரண தரத்தில் 8 ஏ, பி பெறுபேற்றைப் பெற்றவர்.

யாழ்ப்பாணத்தில் இளைய தலைமுறையினரின் வாழ்வைப் பாழாக்கும் வகையில் பொலிஸார் செயற்படுகின்றனர். இவ்வாறான செயற்பாட்டைத் தடுக்க நீதிமன்றம் கவனம் செலுத்தவேண்டும். எனவே 2ஆவது சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்க மன்றைக் கோருகின்றேன் என்று மூத்த சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

வன்முறைகளில் சம்பந்தப்படாதவர்கள் சிலரைச் சந்தேகநபர்கள் என்று கூறிப் பொலிஸார் கைது செய்கின்றபோது, நீதிமன்றம் அவ்வாறானவர்களை விடுவிக்கின்றது. ஆனால் அனைவரையும் தப்புச் செய்யாதவர்கள் – அப்பாவிகள் என்று எடுத்துக்கொள்ள முடியாது.

நவீன தொழிநுட்பங்கள் வந்த பின்னர், வன்முறைகளில் ஈடுபடுபவர்களை இலகுவாக இனங்காண முடிகின்றது. சி.சி.ரி.வி. காணொலிப் பதிவுகளைப் பார்க்கின்ற போது, இளைஞர்கள் எவ்வாறு ஆக்கிரோசமாகச் செயற்படுகின்றனர் என்பது அறிய முடிகின்றது.

பொது இடத்தில் வைத்து கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடவேண்டும் என்பது இல்லை. எத்தனையோ மண்டபங்கள் உள்ளன; வீடுகள் உள்ளன. இவர்கள் வீதியில் வைத்து கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடியுள்ளனர் என்று நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் சுட்டிக் காட்டினார்.

அடுத்த தவணையின் போது சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகையைப் பொலிஸார் தாக்கல் செய்யவேண்டும். சந்தேகநபர்கள் 4 பேரின் விளக்கமறியல் வரும் 15ஆம் திகதி வரை நீடிக்கப்படுகிறது – என்று மன்று கட்டளையிட்டது. (ஐ–7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட உளவள ஆலோசகர் வெற்றிடத்துக்கான நியமனங்களுக்குஎதிர்ப்புத் தெரிவித்தே வடக்கு மாகாண உளவியல் பட்டதாரிகள் கவனவீர்ப்பை முன்னெடுத்தனர் என வடக்கு மாகாண உளவியல் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் எஸ். ஆதி தெரிவித்தார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழுள்ள 45 உளவள ஆலோசகர் வெற்றிடத்துக்கான நேர்முகத்தேர்வை உளவியல் பட்டதாரிகளை தவிர்த்து விட்டு மாகாணக் கல்வி அமைச்சு கோரியுள்ளமையை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மிகவும் பொறுப்பு வாய்ந்த இந்தப் பதவி வெற்றிடத்துக்குத் தகைமைகள் அடிப்படையில் உளவியல் பட்டம் பெற்ற 50க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வடக்கில் உள்ளனர். அவர்களை தவிர்த்து விட்டுப் பாடசாலை ஆசிரியர்கள் உள்ளிட்ட தொழில் ரீதியான தகைமைகளைக் கொண்டிராதவர்களுக்கு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டது.

இந்த விடயத்தில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். இந்த நியமனம் வழங்கப்படுவதைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு நாம் தொடர் போராட்டங்களை மேற்கொள்ள உள்ளோம் – என்று வடக்கு மாகாண உளவியல் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் எஸ். ஆதி மேலும் தெரிவித்தார். (ஐ–7)

## விளையாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லாட்சி அரசின் மூன்றாவது அமைச்சரவை மறுசீரமைப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போது பைசர் முஸ்தபாவுக்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக விளையாட்டுத்துறையும் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## அதிரடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நிகழ்ந்தது.

எதிர்பாராத சில அதிரடி மாற்றங்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் இந்தப் பதவியேற்பு வைபவம் இடம்பெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடந்த நிகழ்வில் 18 புதிய அமைச்சர்கள் பதவியேற்றனர்.

ஒரு சில அமைச்சர்களுக்கு அவர்கள் வகித்த அமைச்சுப் பொறுப்புகளுக்கு மேலதிகமாக மற்றுமொரு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளதோடு, ஒரு சில புதிய அமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில் 18 அமைச்சுப் பொறுப்புக்களைத் தவிர, ஏற்கனவே அமைச்சுப் பதவிகளை வகித்தவர்கள் அதே பதவிகளை வகிப்பார்கள் என அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை விவரம் –

* லக்ஸ்மன் கிரியெல்ல – பொது முயற்சியாண்மை மற்றும் கண்டி அபிவிருத்தி

* மஹிந்த அமரவீர – விவசாயம்

* எஸ்.பி.நாவின்ன – சர்வதேச விவகாரம் மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி

* சரத் அமுனுகம – விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆய்வு திறன் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் மலையகப் பாரம்பரியம்

* துமிந்த திசாநாயக்க – நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவம்

* தலதா அத்துக்கோரல – நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு

* பைசர் முஸ்தபா – விளையாட்டுத்துறை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்

* ரஞ்சித் மத்தும பண்டார – பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டமும் ஒழுங்கும்

* கபிர் ஹாசிம் – பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி

* பி.ஹரிசன் – சமூக அபிவிருத்தி

* மனோ கணேசன் – தேசிய சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள்

சாகல ரத்நாயக்க – செற்றிட் முகாமைத்துவம், இளைஞர் விவகாரம் மற்றும் தெற்கு அபிவிருத்தி

* டி.எம்.சுவாமிநாதன் – மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமய விவகாரம்

* விஜித் விஜயமுனி சொய்சா – மீன்பிடி, நீரியல் வள அபிவிருத்தி மற்றும் கிராமியபொருளாதார அபிவிருத்தி

* விஜயதாச ராஜபக்ஷ – உயர் கல்வி மற்றும் கலாசாரம்

* ரவிந்திர சமரவீர – தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்க விவகாரம்

* சரத் பொன்சேகா – நிலைத்திருக்கும் அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி

* துயா சமரசேகர – சமூக வலுவூட்டல் மற்றும் ஆரம்பக் கைத்தொழில். (ஐ)

## நாளை

03.05.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : கேட்டை மு.இ. 1.02 வரை
திதி : திரிதியை மு.ப 1.20 வரை
சுபநேரம் : 7.26 – 8.56 வரை
இராகுகாலம் : 1.26 – 2.56 வரை

காலைக்கதிர் Kalaikathir



# கொழும்பில் நேற்று மே தின எழுச்சி; தொழிற்சங்கங்களின் 4 பேரணிகள்

வெவ்வேறு இடங்களில் 8 கூட்டங்கள்







தொழிலாளர்தினத்தைகொண்டாடும் விதமாக மே முதலாம் திகதி இடம்பெற்று வரும் பேரணிகள், கூட்டங்கள் இம்முறை, அரசின் கொள்கை ரீதியிலான முடிவின் அடிப்படையில் மே 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டபோதும், நேற்று முதலாம் திகதி தலைநகர் கொழும்பில் மட்டும் 4 மே தின பேரணிகளும் 8 மே தினக் கூட்டங்களும் இடம் பெற்றன.

இடதுசாரி கொள்கைகளை உடைய அரசியல் கட்சிகள் சிலவும் 25 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களும் இந்த பேரணிகள்மற்றும்கூட்டங்களை தனியாகவும் ஒன்றிணைந்தும் ஏற்பாடு செய்திருந்தன.

அத்துடன், வழமையாக மே தினத்தன்று இடம்பெறும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ, முன்னாள் தொழில் அமைச்சர் சி.வி. இலங்கரத்ன மற்றும் முன்னாள் தொழில் சங்கத் தலைவரான ஏ.ஈ. குணசிங்க ஆகியோரை நினைவு கூரும் நினைவஞ்சலி நிகழ்வுகளும் வாழைத்தோட்டம், கங்காராம மற்றும் புறக்கோட்டை ஆகிய பகுதிகளில் அவரவரின் நினைவுத் தூபிகளுக்கு முன்பாக இடம் பெற்றன.

இந்த நிலையில், இம்முறை மே தின பேரணிகள் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர், நாரஹேன்பிட்டி அபயாராம விகாரையில் தொழிலாளர்களுக்கு ஆசி வேண்டி விசேட ஆன்மிக வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு கொள்ளுப்பிட்டியில் இருந்து 22 தொழிற்சங்கங்கள் இணைந்து பேரணி ஒன்றை நடத்தின.

இலங்கை வங்கிச் சங்கம், கட்டுநாயக்க சுதந்திர சதுக்க தொழிலாளர்கள் சங்கம் உள்ளிட்ட சங்கங்களை உள்ளடக்கிய இலங்கை வர்த்தக, கைத் தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் ( சி.எம்.யூ) இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த பேரணி காலை 9.30 மணிக்கு கொள்ளுப்பிட்டி, பாலாட்ரேன்போ அவனியூ பகுதியில் ஆரம்பித்து காலி முகத்திடல் வீதியூடாக கோட்டை ரயில் நிலையம் வரை சென்றது. கோட்டை ரயில் நிலையம் முன்பாக இந்தச் தொழிற்சங்கங்களின் பிரதான கூட்டம் நடத்தப்பட்டது.

அத்துடன் ஐக்கிய சோசலிச கட்சி, முன்னிலை சோசலிசக் கட்சி, நவ சமசமாஜக் கட்சிபோன்றவற்றின் ஊர்வலங்களும் நேற்று இடம்பெற்றன.

இதனைவிட ஊர்வலம் அற்ற கூட்டங்களை மட்டும் பல தொழிற்சங்கங்களும் இடதுசாரி அரசியல் கட்சிகளும் நேற்று நடத்தின.

## மோசடியில் ஈடுபட்டவர் கந்தளாயில் கைது!

கொழும்பு, மே 02

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு லட்சம் ரூபா பண மோசடி செய்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தளாய் வாத்தியாகம பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபர், ஒருவரிடம் இரண்டு லட்சம் ரூபா பணத்தைக் கடனுக்குப் பெற்றுக்கொண்டு அதனை மீள வழங்காது தலைமறைவாக இருந்த நிலையில், கடன் வழங்கிய நபர் பொலிஸாரிடம் செய்த இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் .

விசாரணைகளின் பின்னர் அவரை கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸை கௌரவிக்கும் வகையில் மாதிரி கிராமம்

கொழும்பு, மே 02

இலங்கை சினிமா துறைக்கு பெரும் பங்காற்றிய கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸை கௌரவிக்கும் வகையில் மாதிரி கிராமம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

திஸ்ஸமஹாராம புல்பல்லம என்ற கிராமத்தில் அமைக்கப்படும் உதாகம்மான என்ற திட்டத்திற்கே லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மறைவதற்கு சில தினங்களுக்கு முன்னர் அதாவது கடந்த சனிக்கிழமை அமைச்சர் சஜித் பிரேமதாஸ இந்த கிராமத்தை அமைப்பதற்கான அடிக்கலை நட்டார்.

லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் என்ற இந்த கிராமம் உதாகம்மான வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள 700 ஆவது கிராமமாகும். இது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைக்கப் படும் 133 ஆவது உதாகம்மான எழுச்சி கிராமமாகும்.

இதேவேளை, திஸ்ஸமஹா ராம தேர்தல் தொகுதியில் அமைக்கப்படும் 65 உதாகம்மான கிராமம் என்பதும் குறிப்பிடத்தக்கது. வறுமையிலுள்ள குடும்பங்களுக்காக நாடு முழுவதும் 50 உதாகம்மான கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் கோரிக்கைக்கு அமைவாக இந்திய அரசு 600 கோடி ரூபாவை இந்தத் திட்டத்திற்காக வழங்கியுள்ளது.

## இலக்கியப் போட்டி; விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே.02

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவினர்களுக்கான பிரதேச, மாவட்ட, தேசிய இலக்கியப் போட்டித் தொடர் - (2017/2018 ஆண்டுக்கான) நடத்தப்படவுள்ளது.

இப்போட்டி கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் தேசிய ரீதியில் நடத்தப் படுகின்ற ஒரு நிகழ்வாகும். இப்போட்டி நடத்துவதற்கான நோக்கம் மாணவர்களிடையே இலக்கிய ஆர்வத்தை மேம்படுத்துவதற்காகவும், வாசிப்பு பழக்கத்தையும் ஊக்குவிப்பதற்காகவும் ஆகும்.

எனவே இப் போட்டிக்கான சுற்றுநிருபம் விண்ணப்பப் படிவம் என்பவற்றை மே முதலாம் திகதியிலிருந்து எமது பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும். போட்டிக்கான ஆக்கங்களை விண்ணப்பப்படிவத்தோடு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார பிரிவில் ஒப்படைக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யு.யசோதா அறிவித்துள்ளார். (இ)

## அலங்கார உற்சவம்

சாவகச்சேரி, மே 02

சாவகச்சேரி பெரியமாவடி உழுத்தம்பிலப் பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவத் திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் அலங்கார உற்சவங்கள் இடம்பெறும். (இ)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே.02

ஸ்ரீலங்கா அரச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ். மாவட்ட வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்டத்தலைவர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பொதுக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் என். வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஸ்ரீலங்கா அரச பகிரங்க சேவை ஓய்வூதியர் சங்க உபதலைவர் ஆர்.எம்.வி.ஜே. ரணதுங்க சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். யாழ். சனச வங்கி முகாமையாளர் எஸ். சபேஸ் 'ஓய்வூதியர்களும் நிதிவசதிகளும்'பற்றி உரையாற்றுவார். (இ)


## சட்டவிரோத கட்டடங்களை அகற்றும் பணி இடைநிறுத்தம்!

கொழும்பு. மே 02

நீர்கொழும்பு, மிரிஸ்ஸ கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை அகற்றும் உத்தரவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.கே.பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத கட்டடங்களின் உரிமையாளர்கள், தாங்களே இந்த கட்டடங்களை அகற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், இந்தக் கட்டடங்களை அகற்றக் கூடாது என இரண்டு பிரபல அரசியல்வாதிகள் கடலோர பாதுகாப்புத் திணைக்களத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நெதர்லாந்து சுற்றுலாப் பயணிகள் சிலர் மிரிஸ்ஸ கடற்கரையில் வைத்து தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, இந்தக் கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் 17 சட்டவிரோத கட்டடங்கள் அடையாளம் காணப்பட்டமையோடு, அவற்றை மே முதலாம் திகதிக்கு முன்னதாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என கடலோர பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்திருந்தது.

எனினும் இந்த விடயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா, இந்த நடவடிக்கைகளால் சிறு வியாபாரங்களை நம்பியிருக்கும் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை -

யாழ் பிரதேசத்தில் - சுருவில், மெலிஞ்சிமுனை ஆகிய பிரதேசங்களிலும் -

நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை -

வவுனியா பிரதேசத்தில் -

கல்மடு II கிராமம், கணேசபுரம் கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, நானாட்டான் நகரம், அச்சங்குளம், நொச்சிக்குளம், மயிலங்கேணி, முருங்கன் பிட்டி, ஆத்திக்குளி, செம்மண்தீவு நெற்களஞ்சியம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

காலைக்கதிர் Kalaikkathir



## கத்தி வெட்டுக்காயங்களுடன் மாணவி வைத்தியசாலையில்!

கொழும்பு, மே 02

கத்தி வெட்டுக்காயங்களுடன் மாணவியொருவர் மஸ்கெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மறே, நூக்குவத்தை தோட்டத்தைச் சேர்ந்த 16 வயதான தேவிகா என்ற நல்லதண்ணி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவியே கத்தி வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில், மஸ்கெலியா வைத்தியசாலையில் நேற்றுக் காலை சேர்க்கப்பட்டாரென பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தினசரி ராசி பலன் (02.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரைத்திங்கள் 19 ஆம் நாள் புதன்கிழமை துவிதீயைத்திதி. காலை 7.40 மணி வரை பின்னர் திரிதீயை. நட்சத்திரம்: அனுஷம் மாலை 5.38 மணி வரை. பின்னர் கேட்டை. அமிர்தசித்தயோகம்முழுவதும்.

**ராகுகாலம்** -பகல் 12.07 மணி முதல் 1.40 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 4.23 மணி முதல் 5.53 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - சித்திரை மாத தேய்பிறை திரிதீயை

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - அனுஷம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** அலைச்சல் மிகுந்த நாள். பணம் தட்டுப்பாடாக இருப்பதால் கடன் வாங்க அலைவார்கள். சிலர் படித்து முடித்த கையோடு வேலை தேடித் திரிவார்கள். சிலர் தொழில் இடமாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவார்கள்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் தொல்லை உண்டாகலாம். வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருந்து வரும். உடல் நிலையில் கவனம் தேவை.

**மிதுனம்** இனிமையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். எடுத்த காரியம் தடை நீங்கி ஒப்பேறும். பொன், பொருள், ஆபரணச் சேர்க்கை ஏற்படும். வராது என்று இருந்து பணம் வந்து சேரும். குடும்பக் கடன் அடைக்க முடியும்.

**கடகம்** இன்பமான நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொட்டதெல்லாம் லாபம் தரக் கூடியதாக அமையும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். ஆடை ஆபரணங்கள் சேரும்.

**சிம்மம்** சஞ்சலமான நாள். பண விஷயங்களில் எச்சரிக்கை தேவை. வரவுக்கு மீறிய செலவுகளால் அவதிப்பட நேரும். காணி, வீடு சம்பந்தமான விஷயங்களில் கவனம் தேவை. நம்பியவர்களும் ஏமாற்றுவார்கள் கவனமாக இருப்பது நல்லது.

**கன்னி** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சுமாராக இருக்கும். வியாபாரம் லாபமும், நட்டமுமாக நடக்கும். குடும்பத்தில் பழைய கடன்கள் தேடி வந்து தொல்லை தரும்.

**துலாம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வீடு, காணி வாங்கும் யோகம் உண்டாகும். பெண்களுக்கு அரசு வழியால் சுய தொழில் தொடங்குவதற்கு வாய்ப்பு வசதிகள் வரும்.

**விருச்சிகம்** ஆக்கபூர்வமான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்ப உறவு பாசமும், நேசமும் நிறைந்திருக்கும். எடுக்கும் எந்த முயற்சிகளும் நற்பலனைத் தரும். வியாபாரம் அமோக லாபத்தைத் தரும்.

**தனுசு** சலனம் மிகுந்த நாள். மனக் குழப்பம், யோசனை அதிகரிக்கும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். தேக சுகம் பாதிப்படையும். குடும்பத்தில் வரவுக்கு மீறிய செலவுகளால் கடன்பட சேரும்.

**மகரம்** சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். ஆடை, ஆபரணச்சேர்க்கை உண்டாகும். வெளிநாட்டு உறவினர் வரவால் வீட்டில் கலகலப்பு அதிகரிக்கும்.

**கும்பம்** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்பத்தில் ஒற்றுமையுணர்வு நீடிக்கும். செய்தொழில் விருத்தி அடையும். வியாபாரிகளுக்கு வெளிநாட்டு ஒப்பந்தங்களால் வருமானம் அதிகரிக்கும்.

**மீனம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் பாசமும், நேசமும் கலந்திருக்கும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களின் விருப்பங்கள் நிறைவேறும்.

**சந்திராஷ்டம நாள்: அசுவினி பரணி, கார்த்திகை 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இவ்வாண்டுக்குள் ஏற்படவேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மே தினப் பிரகடனம்

யாழ்ப்பாணம், மே 02

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை மிக விரைவில் இவ்வாண்டுக்குள் ஏற்படுத்த வேண்டுமென அரசையும், அரசியல் கட்சிகளையும், அனைத்து சமூகங்களிடமும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமும் இந்த மே நாள் மாநாடு மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கூட்டமைப்பின் மே தினப் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

**1.அரசியல் தீர்வு**

இலங்கை நாட்டில் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழினப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படாத காரணத்தால் இடம் பெற்று வரும் ஜனநாயக வழிப் போராட்டங்களினாலும், ஆயுதப் போரின் விளைவுகளாலும், 2012 முதல் 2015 வரையான ஐ.நா.மனித உரிமைப் பேரவைத்தீர்மானங்களினாலும், சர்வதேச சமூகத்தின் தலையீடுகளினாலும் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையில் இலங்கைப் நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இருந்தபொழுதிலும் தமிழினப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்படவில்லை. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை மிக விரைவில் இவ்வாண்டுக்குள் ஏற்படுத்த வேண்டுமென அரசையும், அரசியல் கட்சிகளையும், அனைத்து சமூகங்களிடமும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமும் இம் மே நாள் மாநாடு வேண்டுகோள் விடுக்கின்றது.

அந்த அரசியல் தீர்வானது ஒருமித்த இலங்கை நாட்டில் தமிழ் மக்களின் இறையாண்மை, சுய நிர்ணய உரிமை, மனித உரிமை, வாழும் உரிமை அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பில் பிராந்தியங்களினதும் தேசிய இனங்களினதும் தன்னாட்சி உரித்தை உறுதிப்படுத் தும் வகையில் அமையவேண்டும் என இம் மே தின மாநாடு வற்புறுத்துகின்றது.

**2. ஐ.நா.மனித உரிமைத் தீர்மானம்**

ஐ.நா.மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். 2012 முதல் 2015 வரை இலங்கை தொடர்பில் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 30/1இ 34/1 ஆகியன முழுமையாகக் கால அட்டவணையில் நிறைவேற்றவும், நடைமுறைப்படுத்தவும், மக்கள் பயனுறவும் உத்தரவாதம் அளிக்கவும், நம்பகத்தன்மை நிலைநாட்டப்படவும் வேண்டும்.

**3.ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிப்பு**

போரின் காலத்தில் முப்படைகளினாலும், காவல் துறையினாலும் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் ஆக்கிரமிக்கப்பட்ட தனியார், அரச நிலங்கள் தாமதமின்றி விடுவிக்கப்படவேண்டுமென மே மாநாடு வலியுறுத்துகின்றது. அத்தோடு மகாவலித் திட்டத்தின் கீழும், வனவிலங்கு பரிபாலனத்துறை, சுற்றுச் சூழல்துறை, தொல்லியல், கரையோரப் பாதுகாப்பு முதலான அரச மற்றும் அரச துறைகளினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் மக்களிடம் ஒப்படைக்கவேண்டும். நிலமற்ற, வீடு அற்ற, தொழிலற்ற மக்களுக்கு நிலங்கள் வீடுகள், தொழில் வாய்ப்புக்கள் வழங்கும் வகையில் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகிறது. அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பல்வேறுபட்ட பண்ணைகளும் உரித்துடையவர்களிடம் உடன் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**4.காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு**

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறிப்பாகப் போர் காலத்தில் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள், உறவினரால் கையளிக்கப்பட்டவர்கள் தொடர்பில் பதில் வழங்க வேண்டிய பொறுப்பு இன்றைய அரசுக்கும் உண்டு. ஐ.நா.மனித உரிமைப் பேரவைத் தீர்மானத்தினால் நிறுவப்பட்ட விசாரணைக்குழுவின் நடவடிக்கைகள் மீது பாதிக்கப்பட்டவர்களுக்கும் மக்களுக்கும் நம்பகத்தன்மை ஏற்படும் வகையில் சீர்திருத்தங்களும், நடவடிக்கைகளும் இடம்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**5.மீள்குடியேற்றம்**

போரின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தத்தம் நிலங்களில் உடன் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். மக்கள்வாழ்வுரிமை அங்கீகரிக்கப்பட்டு நிலமற்றவர்களுக்கு நிலம், தொழில் அற்றவர்களுக்குத் தொழில், வீடு அற்றவர்களுக்கு வீடு உறுதிப்படுத்தப்பட வேண்டும். வெளிநாடுகளில் குறிப்பாக இந்தியாவில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களை அவர்கள் இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படவேண்டும் என இம் மே மாநாடு வற்புறுத்துகின்றது. புலம்பெயர்ந்த மக்கள் இரட்டைக்குடியுரிமை பெறுவதற்கும் முதலீடுகள் செய்வதற்கும் உள்ள பொருத்தமான இலகுமுறைகள் சட்ட நடவடிக்கை உருவாக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது.

**6.கைதிகள் விடுதலை**

போர் காரணமாக கைது செய்யப்பட்டவர்கள்; சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அரசியல் தீர்மானம் எடுக்கப்பட்டு மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டுமெனவும், அதற்கு வசதியாகவும், நடைமுறைச் சாத்தியமாகவும் உலக தரம் மிக்க சட்டமொன்றை தேவைப்படின் கொண்டு வருவதற்குப் பொருத்தமாகத் தற்போதுள்ள கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டமானது உடன் நீக்கப்பட வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

**7. தொழில் வேலை வாய்ப்பு**

குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கல்வி கற்ற, பட்டப்படிப்புக் கொண்டவர்களுக்கு மூப்பு அடிப்படையில் 2012ஆம் ஆண்டுக்குப் பின்னரிலிருந்து வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்றும் அரசுத் துறையில் வேலை வாய்ப்பைப் பெறத் தகுதியானவர்கள் வயது கூடியவர்கள் இருப்பின் 45வயதுடையவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க அமைச்சவைத் தீர்மானமொன்றை உடன் நிறைவேற்ற வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகின்றது. மேலும் நீண்டகாலமாக சம்பளம் கூட இல்லாமல் ஆசிரியர்களாக இருக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க வேண்டும். குறைந்தது ரூபா 10,000 ஆரம்பத்தில் வழங்கவும் அரசும், மாகாணசபையும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**8.(அ)போராளிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைப்பு**

போர் காரணமாகக் கல்வி பெற வாய்ப்பு அற்றவர்கள் குறிப்பாக போராளிகளாக இருந்தவர்களுக்கு சிறப்பு பயிற்சி, தொழில்நுட்பப் பயிற்சி வழங்கி அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கும் அடிப்படைச் சம்பளம் வாழ்க்கைச் செலவுக்கேற்பவழங்க வேண்டும். அது வரை அவ்வாறானவர்கள் வாழுவதற்கு நிதி உதவி வழங்கும் முறையொன்றைக் கொண்டு வர வேண்டும். ஜனநாயக நீரோட்டத்தில் இணைக்கப் பொருத்தமான நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என மே மாநாடு வற்புறுத்துகிறது.

(ஆ) மேலும் இதற்குப் பொருத்தமாக அரசுத் துறையிலும், ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் அவ்வவ் பிரதேசங்களிலிருந்தே சிற்றூழியர் ஆயினும் நிரப்புதல் வேண்டும். வேலை வாய்ப்புக்கள் அவ்வவ் பிரதேசங்களிலிருந்தே நியமனம் செய்யப்பட வேண்டும்.

அவ் விடயங்களில் தவறாக நிரப்பட்டிருந்தால் அவர்களை திருப்பிப் பெறவேண்டும். உரிய பிரதேசங்களில் இடமாற்றம் வழங்க வேண்டும்.

**9. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்**

போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு புதுவாழ்வு, வாழ்வாதாரம்; வேலை வாய்ப்பு பெறக்கூடிய வகையில் தொழில் துறைகள் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் வாழ்வுரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென மே மாநாடு வற்புறுத்துகிறது.

**10. பெண்கள் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்**

பாலியல் வன்முறைகளிலிருந்து சிறுவர் துஸ்பிரயோகங்களிலிருந்து பெண்களும், சிறுவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். பாலியல் வன்முறைகளில், சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களுக்கெதிராக தண்டனை வழங்கப்படுதல் துரிதப்படுத்தப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றோம். (11 ஆம் பக்கம் பார்க்க)

# எல்லை நிர்ணய அறிக்கையை வெளியிடுவதில் தாமதம்; மாகாணசபை தேர்தல் ஒத்திவைக்கும் சிக்கல் நிலை

கொழும்பு, மே 02

மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கையை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளமையானது மாகாண சபை தேர்தல் ஒத்திவைக்கப் படும் நிலைமையை உருவாக்கியுள்ளது என்றும் பவ்ரல் மற்றும் கபே அமைப் புக்கள் குற்றம்சாட்டியுள்ளன.

மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கை இதுவரையில் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என வும் அந்த அமைப்புக்கள் குறிப்பிட்டுள் ளன.

இது தொடர்பில் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தவை வரு மாறு:-

மூன்று மாகாண சபைகளுக்கான கால எல்லை நிறைவடைந்துள்ள நிலையில் அவற்றுக்கான எல்லை நிர்ணய அறிக் கைகள் இது வரையில் நாடாளுமன்றத் தில் சமர்ப்பிக்கபடவில்லை.

ஒருமாத காலப் பகுதிக்குள் எல்லை நிர்ணய அறிக்கை வெளியிடப்பட்டால் மாத்திரமே குறிப்பிட்ட காலத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடி யும். ஆனால், எல்லை நிர்ணய அறிக்கை இது வரையில் வெளி யிடப்படாத நிலை யில் மாகாணசபை தேர்தலை செப்ரெம் பர் மாதத்தில் நடத்த முடியாத நிலை உரு வாகியுள்ளது.

ஒரு மாத காலப்பகுதிக்குள் எல்லை நிர்ணய அறிக்கை சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் பிரதமரால் எல்லை நிர் ணய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய் வதற்கென தனியான குழுவொன்று நிய மிக்க முடியும்.

அந்த குழுவினூடாக எல்லை நிர்ணய நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் பணிகளை மேற்கொள்ள முடியும். அவ் வாறானவொரு குழுவும் இதுவரையில் நியமிக்கப்படவில்லை.

## பவ்ரல், கபே அமைப்புக்கள் குற்றச்சாட்டு

மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் பல வாறான விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் தற்போது எல்லை நிர்ணய அறிக்கையும் தேர்தலை ஒத்தி வைக்கக் கூடிய சூழ்நிலையை தோற்று வித்துள்ளது.

மேலும், சிவில் அமைப்பு என்ற ரீதியில் எல்லை நிரணய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கென பவ்ரல் அமைப்பு குழுவொன்றை நியமித்துள் ளது.

எவ்வாறாயினும் தற்போது நடைமுறை யில் உள்ள தேர்தல் முறைமையிலாவது மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்தவேண்டும் என்று தெரி வித்துள்ளார்.

இது குறித்து கபே அமைப்பின் நிறை வேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தவை வருமாறு:-

மாகாணசபை தேர்தலை காலந்தாழ்த்து வதற்காகவே எல்லை நிர்ணய அறிக் கையை வெளியிடும் பணிகளும் காலம் தாழ்த்தப்பட்டுள்ளன. எல்லை நிர்ணய அறிக்கை வெளியிடப்படாமல் தேர்தலை நடத்தமுடியாது.

அந்தக் காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால் எல்லை நிர்ணய அறிக்கையும் விரைவில் வெளியிடப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# சிவப்பு அறிவித்தலை விலக்குவதற்கு இண்டர்போலிடம் கோரும் உதயங்க!

கொழும்பு, மே 02

தமக்கு எதிராக பிறப்பிக்கப்பட் டுள்ள இண்டர்போல் சிவப்பு அறி வித்தலை விலக்கிக்கொள்ளுமாறு ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க கோரிக்கை விடுத் துள்ளார்.

சர்வதேச பொலிஸ் துறையான இன்டர்போலிடம் கடிதம் மூலம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மிக் 27ரக விமான கொள் வனவின் போது நிதிமோசடி தொடர்பில் உத யங்க வீரதுங்க டுபாயில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.



எனினும் அவரை இலங்கைக்கு நாடு கடத்துவதில் தொடர்ந்தும் தாம தம் ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், தமக்கு எதிரான சர்வதேச சிவப்பு அறிவித்தலை விலக்கிக் கொள்ளுமாறு உதயங்க வீரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

# 26 அன்னதானசாலைகளுக்குத் தடை!

கொழும்பு, மே 02

ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நடத்தப் பட்டு வந்த 26 அன்னதானசா லைகள் தடை செய்யப்பட்டுள் ளன என இலங்கை பொதுமக் கள் சுகாதார பரிசோதகர்களின் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்தார்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நேற்றுமுன்தினம் காலை ஆறு மணி வரையில் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது இவை தடை செய்யப்பட் டன.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண் டாயிரத்து 530 அன்னதான சாலை கள் இலங்கை பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது.

# ஹெரோயினுடன் இருவர் கைது!



கொழும்பு, மே 02

பண்டாரகம - றைகம் - கெந்த மண்டிய பிரதேசத்தில் 5.330 கிராம் ஹெரோயினுடன் இருவர் நேற்று முன்தினம் கைது செய் யப்பட்டுள்ளனர் எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர்கள் 26 மற்றும் 23 வயதான கணவன், மனைவி எனப் பொலிஸார் தெரி வித்துள்ளது.

இதுதொடர்பாக மேலதிக விசா ரணைகளை பண்டாரகம பொலி ஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

# ஏழை மக்களுக்காக உழைத்தவர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச

## அஞ்சலி நிகழ்வில் மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, மே 02

முன்னாள் ஜனாதிபதி அமரர் ரண சிங்க பிரேமதாஸ மக்களுக்காக அளப் பெரும் சேவையாற்றிய ஒரு தலைவர் என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ரணசிங்க பிரேமதாஸவின் 25 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு புதுக்கடையில் உள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு ஜனாதிபதி உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரி விக்கையில்-

வறிய மக்களை இயலுமை உள்ள வர்களாக மாற்றியமைப்பதற்கு அவர் அர்ப் பணிப்புடன் செயற்பட்டார். இதன்போது அவர் பல சவால்களை



எதிர்கொள்ள நேரிட்டது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

(க)

# பஸ் விபத்தில் யாத்திரிகர்கள் 30 பேர் காயம்

கொழும்பு, மே 02

யாத்திரிகர்கள் பயணித்த பஸ் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்த தில் 30 பேர் காயமடைந்த சம்பவம் மடவல பிரதேசத் தில் இடம் பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

இந்தச் சம்பவத்தில் காயம் டைந்தவர்கள் கலகெதர மருத் துவமனையில் சிகிச்சைக்கா சேர்க்கப்பட்டனர் என பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 15 பேர் கவலைக்கிடமான நிலை யில், மேலதிக சிகிச்சைகளுக் காக கண்டி போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ள னர் எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

(க)

# கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் கோர விபத்து; 25 பேர் காயம்

கொழும்பு, மே 02

காத்தான்குடியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் பஸ் குரு நாகல்-வந்துராகல பகுதியில் வைத்து எரிபொருள் ஏற்றி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் சுமார் 25 பயணிகள் காயமடைந் தனர் என குருநாகல் பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11:30 மணியளவில் இடம்பெற்றுள் ளது.

காயமடைந்தவர்கள் குரு நாகல் போதனா வைத்திய சாலையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டனர்.

பொலிஸார் இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசார ணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எரிபொருள் ஏற்றிவந்த வாகனத்துடன் மோதுண்டு விபத்திற்குள்ளான இந்த பஸ் சேதமடைந்துள்ள போதும் பஸ்ஸும் எரிபொருள் ஏற்றி வந்த பவுஸரும் தீப்பிடிக்கா மையால் மக்கள் பெரும் அனர்த்தத்திலிருந்து காப்பற் றப்பட்டமை குறிப்பிடத்தக் கது.

(க)


## பெரும் அனர்த்தம் தவிர்ப்பு



காலைக்கதிர்



# நுளம்புப் பெருக்கம்: தவளைகள் அழிவே முக்கிய காரணம்



இன்றைக்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கோடிக்கணக்கில் பணம் செலவழித்துக்கொண்டிருக்கிறோம். இன்னும்கூட நம்மால் அதில் வெற்றியடைய முடியவில்லை. ஆனால், இந்தப் பணியை நமக்காகக் காலங்காலமாக இலவசமாகவே செய்து வந்தவை தவளைகள்.

உலகம் முழுவதும் பலவகையான தவளை இனங்கள் இருக்கின்றன. இவை உயிர்ச்சங்கிலியில் மிக முக்கியமான அங்கம். ஆனால், பல்வேறு செயல்பாடுகளால் இன்றைக்கு அந்த உயிர்ச் சங்கிலி உடைந்து தொங்கிக்கொண்டிருக்கிறது. தவளைகளின் அழிவும் உயிர்ச்சங்கிலி உடைந் ததற்கு முக்கியமான காரணம்.

இந்தப் பூமியில் ஒரு செல் உயிரியான அமீபா முதல் யானை வரை அனைத்தும் தேவையின் அடைப்படையில்தான் உருவாக்கப்பட்டுள்ளன. தேவையற்றது என எதுவுமே இல்லை. அனைத்து உயிர்களும் தேவைக்கு ஏற்ற அளவில் இருப்பது தான் உயிரியல் சமநிலை. ஆனால், தற்போது பல உயிரினங்கள் அழிந்தும், குறைவான எண் ணிக்கையிலும் இருக்கின்றமையால் உயிரியல் சமநிலை சிதிலமடைந்து கிடக்கிறது.

**தவளை**

தவளைகளின் அழிவால் மனித இனம் இன்றைக்குப் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகிறது. கோடிக்கணக்கில் செலவழித்தாலும், இன்றைக்கும் நுளம்புகளை ஒழிக்க நம்மால் முடியவில்லை. இந்த நுளம்புகள் மூலமாகப் பல்வேறு விதமான நோய் பாதிப்புக்குத் தொடர்ந்து ஆளாகி வருகிறோம்.

ஆனால், எந்தச் செலவும் இல்லாமல் நுளம்புகளைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்தன தவளைகள். நுளம்புகள் நீர்நிலைகளில்தாம் முட்டையிடும். அந்த



நீர்நிலைகளில் உள்ள தவளைக்கு (தலைப் பிரட்டை) இந்த முட்டைகள்தாம் விருந்து லட்சக் கணக்கான முட்டைகளை இந்தத் தலைப் பிரட்டைகள் அழித்து வந்தன.

ஆனால், நீர்நிலைகளில்சாக்கடை கலந்தது, தவளைகள் வசிக்கத் தோதான இடங்கள் இல்லாமல் போனது போன்ற பல்வேறு காரணங்களால் தவளைகளும், தலைப் பிரட்டைகளும் அழிந்து வருகின்றன.

இதனால் நுளம்புகளின் கொட்டம் அதிகமாகி வருகிறது.

இப்படி இயற்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த உயிரினமான தவளையைக் காக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தவும், மக்களிடம் இது தொடர்பாக விழிப்பு உணர்வு ஏற்படுத்தவும் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் கடைசி சனிக்கிழமை 'தவளையைக் காக்கும் தினம்' கொண்டாடப்பட்டு வருகிறது. இதுதவிர ஏப்ரல் கடைசி சனிக்கிழமையில் உலகக் கால்நடை மருத்துவ தினமும், தேசியப் பறவையியல் தினமும் கொண்டாடப்பட்டு வருகிறது.


## உயிர்ச் சங்கிலியில் இன்னுமொரு விரிசல்

**உலகக் கால்நடை மருத்துவ தினம்**

கால்நடைகளுக்கு அறிவியல்ரீதியான பாதுகாப்பான மருத்துவத்தை உறுதி செய்வதுதான் இந்த நாளின் நோக்கம். 2000 ஆம் ஆண்டு தொடங்கிய இந்தத் தினத்துக்கு இந்த ஆண்டோடு பதினெட்டு வயது. கிராமப்புறப் பொருளாதாரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்காற்றுபவை கால்நடைகள். ஆடு, மாடு, கோழி போன்றவை கிராமப்புற பெண்களின் நடமாடும் ஏ.டி.எம் ஆக இருக்கின்றன. இரண்டு பால் மாடுகள் இருந்தால் ஒரு நடுத்தரக் குடும்பம் நிம்மதியாக வாழ்க்கையை ஓட்டலாம் என்ற நிலையிருக்கிறது.

**கால்நடைகள்**

கால்நடைகள் மூலமாக நல்ல வருமானம் ஈட்டும் பல தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியது கால்நடை பல்கலைக்கழகங்களும், அதில் பணியாற்றும் கால்நடை மருத்துவ வல்லுநர்களும் தாம். கால்நடை மருத்துவம் மூலமாகக் கால்நடைகளுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களுக்கு உடனடியாகத் தீர்வு



காணப்படுகின்றன. கிராமப் புறங்களில் இன்றைக்கும் கால்நடைகளுக்குக் கை வைத்தியம் பார்க்கிறார்கள். இதன் மூலம் சின்ன சின்னப் பிரச்சினைகளை வேண்டுமானால் சரி செய்யலாம்.

ஆனால், பல நேரங்களில் கைவைத்தியம் கால்நடைகளை மேலும் மோசமாக்கி விடுகிறது. உதாரணமாக மாடுகளின் கொம்புகளில் அடிபட்டால் கருப்பட்டியுடன் சுண்ணாம்பு கலந்து கொம்பில் தடவி விடுவார்கள். இது ஒருவகையில் சரியானதுதான் என்றாலும் சிலர், சுண்ணாம்புக் கலவையின் மீது தலைமுடியையும் வைத்துக் கட்டி விடுவார்கள்.

காயம் ஆறியவுடன் முடிகளை எடுக்கும்போது மாடுகளுக்கு அதிக எரிச்சலும், வலியும் ஏற்படும். சரியாகத் தீவனம் எடுக்காத மாடுகளின் நாக்கை வெளியே இழுத்து சிலர், உப்பை வைத்துத் தேய்ப்பார்கள். இது மாடுகளுக்குக் கடுமையான வலியை ஏற்படுத்தும். எனவே, இதுபோன்ற முரட்டு வைத்தியங்களைச் செய்யாமல், முறையான வைத்தியத்தைச் செய்து கால்நடைகளைப் பராமரிக்க வேண்டும் என்பதுதான் உலகக் கால்நடை மருத்துவ தினத்தின் நோக்கம்.

நமது ஊரில் போதுமான கால்நடை மருத்துவர்கள் இல்லை என்பதாலும், கிராமப்புறங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு மருத்துவர்கள் சரியாக வருவதில்லை என்பதாலும் வேறு வழியில்லாமல் கைவைத்தியத்தில் இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்தநிலை வருங்காலத்திலாவது மாற வேண்டும்.

**தேசியப் பறவையியல் தினம்**

சிறகடிக்கும் சிட்டுக்கள், தோகை விரித்தாடும் வண்ண மயில்கள், தேன்சிட்டுக்கள், கரிச்சான்கள், காடை, கவுதாரிகள், மரங்கொத்திகள் என இந்தப் பூவுலகில் சிறகடித்துக்கொண்டிருக்கும் எண்ணற்ற பறவைகளைக் கொண்டாடுவதுதான் இந்தத் தினத்தின் நோக்கம். பறவைகளைப் பார்ப்பது, புகைப்படங்கள் எடுப்பது, பறவைகளின் செயல்பாடுகளைக் கவனிப்பது எனப் பறவை ஆர்வலர்கள் வெவ்வேறு விதமாக இந்தத் தினத்தைக் கொண்டாடுவார்கள். தவளைகளைப் போலவே, உயிர்ச்சங்கிலியில் முக்கியத்துவம் வாய்ந்தவை பறவைகள். காட்டில் வாழும் ஒவ்வொரு பறவையும், அந்தக் காட்டின் வளர்ச்சியில் ஏதாவதொரு வகையில் பின்னிப் பிணைந்திருக்கும்.

**பறவைகள்**

வானம் பார்க்கும் எல்லோருக்கும் ஏதாவதொரு பறவை தெரியும். அதில் சிலருக்கு மட்டும் தான் அவற்றை நேசிக்கத் தெரியும். உங்களுக்கும் பறவைகள் பிடிக்குமெனில் உங்கள் பகுதியில் வந்துசெல்லும் பறவைகள் குறித்து நேரம் கிடைக்கும்போது தெரிந்துகொள்ளுங்கள். அவற்றை அடுத்த தலைமுறையினருக்கும் அறிமுகப் படுத்துங்கள்.

நன்றி- விகடன்

---



யாழ். திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்றது. தேர் உலா காட்சி... (இ)



---

## யாழ் சின்மயா மிஷனில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், மே 02


வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் .. பசுமை காக்க.

ஆண்டிற்கு ஒரு முறை இரத்ததானம் செய்வோம் உயிர் காக்க..



உங்களது குருதிப் பெருங் கொடையால் ஊர் பெயரும் யாதென அறியாதவன், உங்களை உளமாற வாழ்த்திடுவான். எனவே இதனை கருத்தில் கொண்டு, பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் 102வது ஜெயந்தியை முன்னிட்டு யாழ் சின்மயா மிஷன் நடத்தும் இரத்ததான முகாம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மதியம் ஒரு மணி வரை இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் இரத்ததானம் வழங்க விரும்பும் மனித நேயம் உள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர். (இ)



# அணு ஆயுதத் திட்டம்:

# ஈரானின் தகிடுதத்தம்: இஸ்ரேல் வெளியிட்ட ஆவணங்களால் அம்பலம்

ஈரானின் அணுதிட்டம்தொடர்பாக இஸ்ரேல் பெற்றிருப்பதாகக் கூறுகின்ற உயரிய ரகசிய ஆவணங்கள், ஈரான் பொய் கூறியுள்ளதை காட்டுவதாக அமெரிக்க வெளியுறவு செயலர் மைக் பாம் பியோ கூறியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஈரானுக்கும், உலகின் 6 வல்லரசு நாடுகளுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட அணு ஒப்பந்தம், நல்ல நம்பிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை என்பதை இந்த தகவல் சுட்டிக்காட்டுவதாக பாம்பியோ தெரிவித்திருக்கிறார்.

இந்த ஒப்பந்தத்தை கைவிடுவதற்கான ஆவலை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முன்பே தெரிவித்திருக்கிறார். வரக்கூடிய வாரங்களில் இது தொடர்பாக அவர் முடிவு எடுக்கவுள்ளார்.

முன்னதாக, அணு ஆயுத திட்டத்தை இரான் ரகசியமாக தொடர்ந்து வந்துள்ளதை நிரூபிக்கும் ரகசிய அணு கோப்புகள் என்ற சில கோப்புகளை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு வெளியிட்டுள்ளார்.




அணு ஆயுதங்களை சோதனை செய்யவில்லை என்று கூறி ஈரான் உலக நாடுகளை ஏமாற்றி வந்துள்ளதை காட்டும் ஆயிரக்கணக்கான பக்கங்களுடைய ஆவணங்கள் இஸ்ரேலுக்கு கிடைத்துள்ளன என்று அவர் கூறியுள்ளார்.

தன் மீதான தடைகளை நீக்குவதற்கு பிரதிபலனாக அணுத் திட்டத்தை 2015ஆம் ஆண்டு கைவிட ஈரான் ஒப்புக் கொண்டது.

அணு சக்தியை மட்டுமே பயன்படுத்த விரும்புவதாக ஈரான் கூறி வந்தது.

அமத் பணித்திட்டம் என்ற குறியீட்டு பெயரோடு 2003ஆம் ஆண்டு வரை ஈரான் ரகசிய அணு ஆயுத திட்டத்தை நடத்தி வந்துள்ளதாக நெதன்யாஹு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த அமத் பணித்திட்டத்தை நிறுத்திய பின்னரும் ஈரான் அணு ஆயுதங்கள் பற்றிய ஆய்வை ரகசியமாகவே தொடர்ந்து வந்துள்ளதாக அவர் கூறுகிறார்.

இஸ்ரேலின் இந்தக் குற்றச்சாட்டு, ஏற்கெனவே ஐக்கிய நாடுகள் மாமன்ற கண்காணிப்பு அமைப்பால் கையாளப்பட்ட பழைய குற்றச்சாட்டுக்களின் மறுபிறப்பு என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் ஜாவிட் ஸரீஃப் தெரிவித்திருக்கிறார்.

ஈரானோடு செய்திருக்கும் அணு ஒப்பந்தத்தோடு இணைந்திருப்பது தொடர்பான அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் முடிவில் பாதிப்பை ஏற்படுத்த நெதன்யாஹு செய்கின்ற குழந்தைத்தனமான நடவடிக்கை இது என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஈரானின் அணு திட்டத்தை கைவிடுவது தொடர்பாக 5 உலக வல்லரசு நாடுகளும், அமெரிக்காவும் 2015ஆம் ஆண்டு ஈரானோடு ஒப்பந்தத்தை உருவாக்கின.

முன்னாள் அதிபர் பராக் ஒபாமா காலத்தில் எட்டப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்ள போவதாக மிரட்டியிருக்கும் அதிபர் ட்ரம்ப், நெதன்யாஹு சமர்ப்பித்திருப்பதன் ஒரு பகுதியை அறிய வந்துள்ளதாகவும், இத்தகைய நிலைமையை ஏற்க முடியாது என்றும் தெரிவித்திருக்கிறார்.

நெதன்யாஹுவின் ஆவணங்களில் புதிய மற்றும் கட்டாயமாக தெரிய வேண்டிய விவரங்கள் அடங்கி இருக்கின்றன என வெள்ளை மாளிகை அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

ஆனால், ஈரானோடு ஏற்படுத்தியிருக்கும் அணு ஒப்பந்தத்தை தொடரப் போவதாக ஐரோப்பிய நாடுகள் கூறியுள்ளன.

இஸ்ரேல் அறிய வந்துள்ள உளவு தகவல் பற்றி பிரான்ஸ் மற்றும் ஜேர் மனி நாடுகளின் தலைவர்களிடம் பேசியுள்ளதாகவும், இது பற்றி இவ்விரு நாடுகளிடமும் விவாதிக்க பிரதிநிதிகளை அனுப்பவுள்ளதாகவும் நெதன்யாஹு தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேல் பெற்றிருக்கும் உளவுத்துறை தகவல்கள் பற்றி விவரமான பகுப்பாய்வை மேற்கொள்ள போவதாக ஜேர்மனி அரசு செய்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேல் வழங்கியிருக்கும் தகவல்களில், இந்த ஒப்பந்தத்தை மாற்றிவிடக் கூடிய எதையும் தான் காணவில்லை என்று ஈரான் அணு ஒப்பந்தம் தொடர்பாக பணியாற்றிய அமெரிக்க வெளியுறவு துறையின் தடைகள் விதிப்பதற்கான முன்னாள் துணை இயக்குநர் ஜோன் ஹியுக்ஸ் கூறியுள்ளார்.

ஈரானின் அணு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றுவதற்கு அதிபர் ட்ரம்ப் முடிவெடுப்பதில் செல்வாக்கு ஏற்படுத்தும் நோக்கிலான அரசியல் அறிவிப்பு இது என்று நினைக்கிறேன் என்று அவர் கூறியுள்ளார்.



அணு ஆயுதங்களை சோதனை செய்யவில்லை என்று கூறி ஈரான் உலக நாடுகளை ஏமாற்றி வந்துள்ளதை காட்டும் ஆயிரக் கணக்கான பக்கங்களுடைய ஆவணங்கள் இஸ்ரேலுக்கு கிடைத்துள்ளன என்று அந் நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு கூறியுள்ளார்.



தற்போதைய ஈரான் அணு ஒப்பந்தத்தை தொடர்வது மிகவும் முக்கியமானது என்று பிரான்ஸ் அதிபர் மக்ரோன், பிரிட்டன் பிரதமர் தெரேசா மே மற்றும் ஜேர்மனி சான்சலர் ஏங்கெலா மெர்கல் கூட்டாக தெரிவித்துள்ளனர்.




தனது மாதாந்த கொடுப்பனவு மூலம் உடுவிலில் உள்ள ஒன்பது குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கினார் மாகாண சபை உறுப்பினர் தவராசா துவாரகன். (இ



கீரிமலை ஸ்ரீ பராசக்தி அம்பாள் ஆலயபெருந்திருவிழாவில் 'வாழ்வும் வழிபாடும்- என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றிய சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் ஆலய பிரதம குருவினால் பூங்காவன உற்சவத்தில் கௌரவிக்கப்படுகின்றமையையும் சொற்பொழிவுக்காக கௌரவிக்கப்பட்ட ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் மற்றும் ஆலய பரிபாலகர்களையும் படங்களில் காணலாம். (இ)




# கல்விக் கதிர் வெளியீடு


## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

பகுதி - I

31

12. இங்கு வேறுபட்ட பரப்பளவைக் கொண்ட உரு யாது?

1. 2. 3.



தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்க

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை ......... 1. .......... எனது தம்பியும் எனது நண்பியின் பிறந்தநாள் வீட்டிற்கு சென்றோம். அவனுக்கு பொம்மை ஒன்றை பரிசாக கொண்டு .......... 2. ................. அவனுடைய வீடு மிகவும் .............. 3. .............. அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவன் எங்களை நன்கு.................4. ............ பின்பு அவனுக்கு கொண்டு சென்ற பரிசைக் கொடுத்து விட்டு வீடு திரும்பினோம்.

13. முதலாவது எண்ணுக்கு பொருத்தமான சொல்?

1. என் 2. நான் 3. நானும்

14. இரண்டாவது எண்ணுக்கு பொருத்தமான சொல்?

1. சென்றேன் 2. சென்றோம் 3. வந்தேன்

15. மூன்றாவது எண்ணுக்கு பொருத்தமான சொல்?

1. அழகாக 2. அருவருப்பாக 3. குப்பையாக

16. நான்காவது எண்ணுக்கு பொருத்தமான சொல்?

1. திட்டினான் 2. உபசரித்தான் 4. அவமதித்தான்


17. சரியான கோவையைத் தெரிவு செய்க?

1. 444 + 44 + 44 + 4 + 4 = 500

2. 444 + 44 + 4 + 4 + 4 = 500

3. 444 + 44 + 4 + 4 + 4 + 4 = 500

✓ கீழே காட்டப்பட்டுள்ள பழங்களின் விலைகளை அவதானித்து பின்வரும் வினாக்களின் விடைகளைத் தெரிவு செய்க?



ரு 60.00



ரு 600.00

18. ஒரு மெழுகுதிரின் விலை யாது?

1. ரு 10.00 2. 15.00 3. 30.00

19. மூன்று மணிக்கூட்டினது விலை யாது?

1. ரு 200.00 2.ரு 900.00 3. ரு 800.00

20. 15 மெழுகுதிரிகள் வாங்க ரூபாய் 300 ஐக் கொடுத்தால் எவ்வளவு பணம் மிகுதியாகக் கிடைக்கும்?

1.ரு 225 2. ரு 125 3.ரு 75

21. 10 இற்கும் 21 இற்கும் இடையிலான இரட்டை எண்களின் எண்ணிக்கை யாது?

1. 8 2. 6 3. 5

22. செவ்வகம் ஒன்று 64 $cm^2$ பரப்புடையது எனின் அதேயளவு பரப்பளவைக் கொண்ட சதுரத்தின் சுற்றளவு யாது?

1. 16 cm 2.8 cm 3. 18 cm

23. “ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று எட்டு” என்ற எண்ணுடன் இரண்டினை கூட்டும் போது கிடைக்கும் எண்?

1. 10 000 2. 9 998 3. 10 008

சதீஸ் தினமும் உண்டியலில் பணம் சேகரிக்கும் வழக்கம் உடையவன். அவன் 5 நாள்கள் உண்டியலில் போட்ட பணத்தின் விவரம் பின்வருமாறு?

| 1 ம் நாள் | 2 ம் நாள் | 3 ம் நாள் | 4 ம் நாள் | 5 ம் நாள் |
|---|---|---|---|---|
| ருபா 12.00 | ருபா 24.00 | ருபா 36.00 | ருபா 48.00 | ருபா 60.00 |

24. 6 ஆம் நாள் உண்டியலில் போட்ட பணம் எவ்வளவு?

1. ரு 65.00 2. ரு 72.00 3. ரு 8.00

25. மொத்தமாக அவன் ஐந்து நாள்களும் சேர்த்த மொத்தப் பணம் எவ்வளவு?

1. ரு.210 2.ரு 180 3. ரு 160






# விடா முயற்சி

போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் வெற்றி பெற்றான். வெற்றி பெற்ற எதிரி அரசனை கொல்ல திட்டமிட்டான். அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்று அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.

ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் ஈர்த்தது.


குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.

இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கைவிடாமல் மறுபடி மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்? என யோசித்தான்


நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும் என்று எண்ணினான். மறுபடியும் தன் எதிரியுடன் போர் புரிய தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆள்களைச் சந்தித்தான்.

தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்த சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.

படத்தில் காணப்படும் புள்ளிகளை இணையுங்கள் பார்க்கலாம்?




## 5 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்





## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீடு உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் கஞ்சிகைப் பிரிவு 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

காலைக்கதிர் Kalaikkathir




# தமது உரிமைகளை வெற்றி கொள்வதற்கு உழைக்கும் மக்களுக்கு பலம் கிடைக்க வேண்டும்

தமது உரிமைகளை வெற்றி கொள்வதுடன் நாட்டிற்காக தமது கடமைகள் மற்றும்பொறுப்புக்களைநிறைவேற்றுவதற்கு எந்தவிதமான குறைபாடுமின்றி அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு அனைத்து உழைக்கும் மக்களுக்கும் பலம் மற்றும் துணிச்சல் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள மே தினச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

நவீன தொடர்பாடல், தொழிநுட்ப முன்னேற்றத்துடன் ஊழியத்திற்கான பெறுமதி மற்றும் அதன் பயன்பாடு மிகவும் விரிவடைந்துள்ளது.



மே தினச் செய்தியில் பிரதமர் ரணில்

உழைக்கும்மக்கள்என்போர் இனிமேலும் தொழிற்சாலையில், பண்ணையில் மாத்திரம் வேலை செய்வோர் அல்லர். உருவாகியுள்ள பரந்த தொழில்ரீதியான சூழலில் வேலை செய்யும் மக்கள் தமது உரிமைகள் தொடர்பாக உணர்வுபூர்வமாக நோக்குதல், கலந்துரையாடுதல் போன்றே நாட்டிற்கும் மக்களுக்கும் தன்னால்நிறைவேற்றப்படவேண்டிய பொறுப்புக்கள் தொடர்பாகவும் உரிய கவனத்தைச் செலுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

உலக வரலாற்றில் தொழிலாளர் போராட்டங்கள் உழைக்கும் மக்களுக்குப் பல உரிமைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன், தற்காலத்தில் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சம்பிரதாய போராட்டங்களைத் தாண்டிச் சென்ற புதிய முறைமைகளைக் கண்டறியும் சவால் நம் அனைவரின் முன்பாகவும் காணப்படுகிறது.

நவீன தொடர்பாடல், தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் உழைக்கும் மக்கள் ஒன்று சேர்வதற்கு, தமது உரிமைகள் தொடர்பாகப் பேசுவதற்கு, அது சார்ந்து நிற்பதற்கு மிகவும் செயல்திறமுடைய திறந்த உரையாடல் அரங்குகள் காணப்படுகின்றன.

புதிய நோக்குடன் மிகவும் விரிவான உரையாடல், கலந்துரையாடல், செயல் திறமுடைய தலையீடு என்பவற்றுடன் தொழிலாளர் தினத்திற்குப் புதிய அர்த்தமொன்றை வழங்க நாம் அனைவரும் அணிதிரள வேண்டும்.

முன்னேற்றமடைந்த உலகுடன் கைகோத்து உண்மையான மறுமலர்ச்சியை நோக்கி எமது நாட்டை உயர்த்துவதற்கு உழைக்கும் மக்களின் உயர்ந்தபட்ச பங்களிப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்.

தமது உரிமைகளை வெற்றி கொள்வதுடன் நாட்டிற்காக தமது கடமைகள் மற்றும்பொறுப்புக்களைநிறைவேற்றுவதற்கு எந்தவிதமான குறைபாடுமின்றி அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு அனைத்து உழைக்கும் மக்களுக்கும் பலம் மற்றும் துணிச்சல் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இனப்பிரச்சினைக்கு அரசியல் ...

06 ஆம் பக்கத் தொடர்ச்சி...

**11. தொழில் துறைகள்**

போர் காரணமாக அழிக்கப்பட்ட, கைவிடப்பட்ட பெருந் தொழிற்சாலைகள் பொருத்தமான வகையில் நவீனமயமாக்கப்பட்டு மீளக் கட்டியெழுப்புதல். போரால் பாதிக்கப்பட்டு வேலைவாய்ப்பு அற்றிருக்கும் இளைஞர், யுவதிகளின் எதிர்கால வாழ்வாதாரத்தையும், வாழ்க்கையையும்கட்டியெழுப்புவதற்குப்பொருத்தமாக புதிய அறிவியல் தொழில்நுட்பத்தை; பயன்படுத்தி புதிய சிறு தொழில்கள்,மத்தியதரதொழில்கள்பெருந்தொழில் துறைகளை குறுகியகால, நீண்டகால அடிப்படையில் உருவாக்க வேண்டும்.

**12. தெங்கு பனம் பொருள் அபிவிருத்தி**

(அ) பனம் பொருள்துறைகள், பதநீர், கருப்பட்டி மற்றும் பனைவள உற்பத்திகள் மற்றும் திக்கம் வடிசாலை அபிவிருத்தி, கள்ளு போதையற்ற நிலையில் போத்தலில் அடைத்தல் அதனை சந்தைப்படுத்தல் நவீன முறையில் ஏற்படுத்த வேண்டும். அதனால் பெறப்படும் இலாபங்கள் கூட்டுறவாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

**13.மீன்பிடித்துறை**

மீன்பிடித்துறையில் நவீன தொழில்நுட்பமும் பயிற்சியும், சந்தைப்படுத்தலும் அவசியமாக்கப்பட வேண்டும். மட்டக்களப்பு கல்லடியில் பழுதடைந்த நிலையில் உள்ள ஐஸ்கட்டி தொழிற்சாலை புனரமைக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட வேண்டும். மீன் பதனிடுதல் மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையிலும் ஏற்றுமதி செய்வதற்கும் பாதுகாப்பான தகரத்தில் அடைத்தலுக்கு ஏற்ற தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டும். இலாபங்கள் தொழில் செய்பவர்களுக்கே செல்லும் வகையில் திட்டமிடப்பட வேண்டும்.

**14. கல்வி**

ஆரம்பக் கல்வி கற்பதும் கட்டாயமானதாகும். பல்கலைகழக மற்றும் தொழில் துறை கற்கை நிறுவனங்கள், தொழில்நுட்பக் கற்கைகள் வடக்குக் கிழக்கில் பிராந்திய உயர் கற்கை நிறுவனங்களாகவும், அனைத்துப் பீடங்களையும் கொண்டனவாகவும்; மாணவர் அனுமதியில் 75 வீதத்துக்கு மேல் அந்தந்தப் பிராந்தியங்களிலிருந்தே,திட்டமிட்ட அடிப்படையில் தேர்ந்தெடுப்பதும் தொழிலை உறுதிப்படுத்துவதும் அறிவியல், மருத்துவம்,பொறியியல் மற்றும் வர்த்தக துறைகளுக்கு 65 வீதமானவர்களை உருவாக்குதலும் வேண்டும் என மே மாநாடு வற்புறுத்துகிறது.

**15. நில, நீர் உரிமை நிலைநாட்டல்**

மகாவலி நீர் வேளாண் அபிவிருத்தியில்; குடிசார் மக்கள் இன வீத மாற்றம் (not to change demographic pattern) ஏற்படாத வகையில் நீர்பாய்ச்சல், குளங்கள் என்பவற்றிற்கு நீர்ப்பாசனத்திற்கு மட்டுமே அத்திட்டங்கள் பயனுற வேண்டும். அபிவிருத்தியில், குடியேற்றத்தில் அப்பிராந்திய மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பவை உறுதி செய்யப்பட வேண்டும். இத் திட்டங்கள் எவ்வகையிலும் இன விகிதாசாரம் மாற்றப்படாமலிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**16. வங்கிக் கடன் இரத்து**

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வங்கிகள், கடன்கள் வழங்கியிருந்தன. அக் கடன்கள் அம் மக்களுக்கு வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொடுக்கவில்லை. கடன் பெற்றவர்கள்; போரில் உடைமைகளை தொழிலை இழந்தவர்கள் கடன்களைத் தீர்க்க முடியாமல் இருந்ததையும் இழக்கும் நிலையில் உள்ளனர். இவர்கள் பெற்ற கடன்களை இரத்துச் செய்ய வேண்டும் என வற்புறுத்துகின்றது இம் மே மாநாடு

**17. தொழிற்சங்க உரிமை**

பல துறைகளிலும் தொழிலாளர்கள் உரிமைகளுக்காக உழைத்து வரும் தொழிற்சங்கங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். அச்சங்கங்களுடன் அரசு பிரச்சினைகள் எழும்போது அவர்களுடன் ஜனநாயக ரீதியில் பேச்சுக்கள் மூலம் இணக்கம் ஏற்பட முயற்சிப்பது தான் தேவையென வற்புறுத்துகிறோம்.

**18.** தேர்தல்களில் மலையக மக்கள், முஸ்லீம் மக்கள், பெண்கள் குறிப்பாக ஏனைய சமூக மக்கள் பெரும்பான்மையாயிருக்கும் நிலையில் வட்டாரங்களில், தொகுதிகளில் தனியான ஒதுக்கீடுகள் வீதாசார அடிப்படையில் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும் வகையில் உருவாக்கப்பட வேண்டும்.

**19. வடக்கு - கிழக்கு மீனவர்களின் தொழிலுரிமை பாதுகாக்கப்படுத்தப்படல் வேண்டும்.**

மீன்பிடிப்பதிலும் கலங்களைப் பயன்படுத்துவதிலும் நவீன பயிற்சிகளும், சிறந்த பாவனைக்குரிய கலங்கள் தனித்தும், கூட்டாகவும்தொழிலில் ஈடுபடுவதற்கு அரசு நவீன முறைகளைக்கையாள உதவவேண்டும். சந்தைப்படுத்தலில் தொழிலில் ஈடுபடுபவர்கள் முழு அளவில் வருமானத்தை ஈட்டுவதற்கும் பொருத்தமான வகையில் திட்டங்கள் அறிமுகப்படுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கு மீனவர்கள் தங்கள் வாழ்விடங்களிலிருந்து கடலில் தொழில் செய்வதற்குத்தடையாகவும்,மீன்வளத்தை அழிக்கும் வகையிலும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி சாதனங்கள் வள்ளங்கள் பயன்படுத்துதல் தென்னிலங்கை மீனவர்களும் அயல் நாடுகளிலிருந்து பெரும் கலங்களையும், இயந்திரங்களையும் வடக்குக் கிழக்குப்பிராந்தியக் கடலில் வந்து தரித்து நின்று ஆக்கிரமித்து மீன் வளத்தை அள்ளிச்செல்வதினாலும் ஊர் மீனவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

**20. வடக்கு - கிழக்கில் கூட்டுறவுத் துறை ஒரு காலத்தில் இலாபத்துடன் மக் களுக்குப் பெரும் சேவை ஆற்றி வந்தது.**

போர் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்பட்ட மக்களிடையே அச்சுறுத்தல் மத்தியிலும் பெரும் உதவியாக விளங்கியது. அக்காலத்திலும், அதன் பின்னரும் கூட்டுறவுச் சங்கங்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டும் கடன்படும் நிலைக்கும் தள்ளப்பட்ட கூட்டுறவு ஊழியர்கள் சம்பளம் பெறாமலே பலகாலம் தம்மை அர்ப்பணித்து மக்களுக்கு உதவி வந்தனர். குறிப்பாக வடபகுதியில் கூட்டுறவுத்துறையடைந்துள்ளநட்டங்களுக்கும்,கடன்களுக்கும் அரசு பொருத்தமான உதவி வழங்க வேண்டும். மீண்டும் கூட்டுறவுத்துறைக்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமென அரசையும், மாகாணசபையையும்வற்புறுத்துகின்றது இம் மாநாடு.

**21.** அண்மையில் 2018ல் நடைபெற்ற உள்ர் அதிகாரசபைத் தேர்தல்களினால் உருவாக்கப்பட்ட சபைகளுக்கு நிதி உட்பட கூடுதலான அதிகாரங்கள் அரசமைப்பால் வழங்கப்பட வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை யும், மக்களையும் மீளக் கட்டியெழுப்பு வதற்கு போதிய நிதி நன்கொடைகள் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

**22.** பனை, தென்னை அபிவிருத்திச் சபை மாகாண அதிகாரத்தில் கொண்டு வரவேண்டும். பனை தென்னை அபிவிருத்திச் சபைக் கூட்டுறவுக் கட்டமைப்பினால் நிர்வகிக்க முழு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். திக்கம் வடிசாலை நவீன வசதிகளுடன் மீளக் கட்டியெழுப்ப அரசின் ஒப்புதல் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பின்னரும் சம்பந்தப்பட்ட அமைச்சு கைத்தொழிற்சாலையை நிறுவ முறையான நடவடிக்கை எடுக்காமையை கண்டிக்க வேண்டும். அரசு தலையிட்டு திக்கம் வடிசாலையை கட்டியமைக்க கூட்டுறவுத் துறையிடம் ஒப்படைக்கவும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**23.** வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த வேண்டும். வாழ்க்கை செலவுக்கு ஏற்ப சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

**24.** நெல், வெங்காயம் முதலான வேளாண் விளைச்சல்,மீன் வளம், பனைவளம்முதலானஉற்பத்திபண்டங்களுக்கு நியாயவிலைநிர்ணயிக்கப்படவேண்டும். வேளாண்மை அறுவடைக் காலங்களில் அவ்வுற்பத்திகள் இறக்குமதி நிறுத்தப்பட வேண்டும். சந்தைப் பொருளாதாரம் வர்த்தகம் உயர்த்துவதற்கு பொருளாதார மையங்கள் உருவாக்கப்பட வேண்டும். உலகதர உற்பத்திகளைப் பெருக்கவேண்டும். அதே வேளை வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் போதிய நிவாரணம்; அரசு வழங்க வேண்டும்.

**(அ).** உலக சந்தைப் பொருளாதாரத்துடன் போட்டியிடக் கூடிய புதிய உற்பத்திகள், மாற்றுப் பயிர் விளைச்சல் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அறிமுகப் படுத்திய அதே வேளை பெரு வர்த்தகம் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளூர் வர்த்தகம் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

**25.** உலக தர ஆங்கில மருத்துவம், சித்த மருத்துவம் மற்றும் ஆயுள்வேதம். அதற்குரிய மருத்துவர்கள், தாதிகள் சிற்றூழியர் தேவைக்கேற்றவாறு நியமிக்கப்பட வேண்டும்.

**(அ)** மக்களின் உடல் நலம் உலக சுகாதார மேம்பாட்டை கொண்டதாகவும் அனைவருக்கும் மருத்துவம் கிடைப்பதையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கு உலக தர மருத்துவம் உறுதிப்படுத்தவும் பொருத்தமான மருத்துவர்கள், தாதிகள் (ரேசளநள) நியமனம் செய்யப்பட வேண்டும்.

**26. ஊடகவியலாளர்**

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பது ஜனநாயகக் கடமையாகும் இருந்தும் பல ஊடகவியலாளர் தமிழ் சிங்கள ஆசிரியர்களுட்பட மர்மமான முறையிலும் நேரடியாகவும் கொல்லப்பட்டுள்ளனர். ஊடகத்துறை மிகுந்த அச்சுறுத்தலுக்கும், வன்முறைகளுக்கும் உள்ளாகி வருகிறது.

இத்தகைய கொலைகள் அச்சுறுத்தல்கள் பற்றி முழுமையான நேர்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இக் கொலைகள் அச்சுறுத்தல்களின் பின்னணிகள், உண்மைகள் வெளிக் கொணரப்பட வேண்டும். இதற்காக ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவும் வேண்டும் என இம் மே மாநாடு வற்புறுத்துகிறது.

**27.** வடக்குக் கிழக்கிற்கு இணைந்த கட்டுமானமும் மேற்பார்வையும் (Monitoring & Combined Mechanism for NE Economic Development)

போரினால் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசங்களையும், மக்களையும் மீளக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் துறைகளிலும் முழுமையான ஒன்றிணைந்த திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டு அத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தவும் நிறைவேற்றவும் நிபுணத்துவமும், வினைத்திறனும் அர்ப்பணிப்பும் கொண்ட பொறிமுறை நிறுவப் பட வேண்டும். போரினால் சீரழிந்த நாடுகளின் மீளக் கட்டியெழுப்புவதில் அனுபவம் நிபுணத்துவம் மிக்கவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதுடன் கால அட்டவணையில் அத்திட்டங்கள் நிறைவேற்றப்படுதலும் உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்தப் பிரகடனத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களின்பால் அதிக அக்கறையை அரசு செலுத்த வேண்டும் என்றும், கூட்டு எதிர்க்கட்சி உட்பட அனைத்து அரசியலாளர்கள், சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்கள், அரச துறை சாரா நிறுவனங்கள், அறிவுழைப்பினர் (புத்திஜீவிகள்) உள்ளிட்ட நாட்டு நலனின்பால் அக்கறையுள்ள அனைவரும்தங்களாலானசாதகநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அக்கறையோடும், அன்போடும் வேண்டி நிற்கின்றோம். - என்றுள்ளது. (ஐ)

# மரணத்தை தேடி சுவிற்சர்லாந்து செல்லும் 104 வயது விஞ்ஞானி!


சிட்னி, மே 02

ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற 104 வயதான விஞ்ஞானி டேவிட் குடால் வாழ்க்கை தரம் குறைந்து வருவதால் மரணத்தை தேடி சுவிற்சர்லாந்து செல்கிறார்.

ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற விஞ்ஞானி டேவிட் குடால் (வயது 104). உடல் நலனைப் பாதிக்கும் வகையில் இவருக்கு நோய் எதுவும் ஏற்படவில்லை. நல்ல உடல் நலத்துடன் தான் இருக்கிறார்.

இருந்தும் அவர் உயிர்வாழ விரும்பவில்லை. மரணம் அடைய வேண்டும் என விரும்புகிறார். மரணத்தை தேடி சுவிற்சர்லாந்து செல்கிறார். இங்கு பசெல் என்ற இடத்தில் மரணத்தை வரவழைத்து தரும் நிறுவனம் உள்ளது. அங்கு தங்கி இருக்க அனுமதி பெற்றுள்ளார்.

'நான் மகிழ்ச்சியாக இல்லை. இறக்க விரும்புகிறேன். மரணம் அடைவதை குறித்து எனக்கு கவலை இல்லை.





ஆனால் இறப்பை தடுப்பது எனக்கு கவலை அளிக்கிறது.

என்னைப் போன்ற வயதான ஒருவருக்கு மரணத்தை முடிவு செய்வதற்கான உரிமை உள்பட முழுக்குடியுரிமையும் வழங்கப்பட வேண்டும் என விரும்புகிறேன்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவர் 'பெர்த்தில் உள்ள எடித் கோவன் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்து வருகிறார். முதுமை காரணமாக அவர் பணிபுரிய தகுதியற்றவர் என கூறி கடந்த 2016 ஆம் ஆண்டு 102 ஆவது வயதில் அவரை பதவியில் இருந்து நீக்க நிர்வாகம் முற்பட்டது.

அதற்கு உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதை தொடர்ந்து தனது முடிவில் இருந்து பல்கலைக்கழக நிர்வாகம் பின்வாங்கியது.

இவர் ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். தற்போது ஆய்வுக் கட்டுரைகளைத் திருத்தி வருகின்றார்.

தற்போது இவர் சுவிற்சர்லாந்து செல்வதற்கான செலவுகளுக்காக 'எக்சிட் இன்டர் நேஷனல்' என்னும் அமைப்பு நிதி திரட்டிவருகிறது. அதன் மூலம் இதுவரை 17 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்கள் சேர்ந்துள்ளன.

விஞ்ஞானி டேவிட் குடால் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டில் சுவிற்சர்லாந்தில் வில் விக்டோரியா நகரில் மரணம் அடைய விரும்புகிறார். ஆஸ்திரேலியாவில் இறப்புக்கு உதவுதல் சட்டவிரோதமாகும். ஆனால், விக்டோரியா மாகாணத்தில் மட்டும் கடந்த ஆண்டில் தான் இதற்கு அனுமதி அளித்து சட்டம் இயற்றப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரியா மீது மீண்டும் தாக்கு



சிரியா மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சிரியா அரச படை இரசாயன தாக்குதல் நடத்தியது எனக் குற்றம் சாட்டி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கடந்த 13 ஆம் திகதி சிரியா மீது ஏவுகணை தாக்குதல் நடத்தின.

சுமார் 110 ஏவுகணைகள் சிரியாவின் இரசாயன ஆயுத கிடங்குகளைக் குறிவைத்து வீசப்பட்டன.

இந்த நிலையில், சிரியாவின் ஹமா, அலெப்பா நகரில் உள்ள விமானப் படைத் தளங்களைக் குறிவைத்து நேற்று முன்தினம் குண்டுகள் வீசப்பட்டன.

இந்தத் தாக்குதலில் சிரியாவின் நட்பு நாடான ஈரானைச் சேர்ந்த ராணுவ வீரர்கள் உட்பட 25 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

அடையாளம் தெரியாத எதிரிகள் வான்வழி தாக்குதலை நடத்தியுள்ளனர் என சிரியா குற்றம் சாட்டியுள்ளது. இஸ்ரேல் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து இஸ்ரேல் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என்கிறார் தென் கொரிய ஜனாதிபதி

சியோல், மே 02

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என்று தென்கொரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொரிய நாட்டின் பிரிவினைக்கு பிறகு வடகொரியாவும், தென் கொரியாவும் எதிரும் புதிருமாக இருந்தன. தென்கொரியாவுக்கு எதிராக வடகொரியா அணு ஆயுத சோதனைகள் மற்றும் ஏவுகணை சோதனையை நடத்தியது.

இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

இந்த நிலையில் 65 ஆண்டுகளுக்கு பிறகு வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் - யங் மற்றும் தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் ஐ சமீபத்தில் சந்தித்துப் பேசினர். அப்போது கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுத பரவலை முற்றிலும் ஒழிக்க முடிவு செய்கிறோம் என அறிவித்தனர்.

கொரிய பிராந்தியத்தில் அமைதியை மட்டுமே விரும்புகிறோம் என மூன் ஜே இன் கூறியுள்ளார். அதற்காக வட கொரியாவிடம் தொடர்ந்து இணக்கமான போக்கை கடைப்பிடிக்க இருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.



இரு கொரிய நாட்டு தலைவர்களும் சந்தித்து பேசிய நிகழ்வை உலகமே உற்று நோக்கியது. இந்த வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வுகள் அனைத்துக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தான் காரணம் என தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் தெரிவித்துள்ளார்.

டிரம்ப் எடுத்துள்ள இந்த சீரிய முயற்சிகளுக்காக அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் புகழாரம் சூட்டியுள்ளார்.

தென் கொரிய ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு பின்னர் தற்போது உலக நாடுகளின் கவனம் வடகொரிய ஜனாதிபதிக்கும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கும் இடையிலான சந்திப்பு குறித்து திரும்பியுள்ளது. அவர்கள் இருவரும் எதிர்வரும் ஜூன் மாதமளவில் சந்தித்து பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உலகின் மிக வயதான சிலந்தி ஆஸ்திரேலியாவில் இறப்பு!



ஆஸ்திரேலியாவின் மேற்கு பகுதியில் உலகின் மிக வயதான சிலந்திப் பூச்சி தனது 43 ஆவது வயதில் இறந்துள்ளது.

வைல்ட் டிராப்டோர் வகை சிலந்தி உலகின் மிக வயதான சிலந்திப் பூச்சியாக அறியப்பட்டது. கடந்த 1974 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் மேற்கு பகுதியில் உள்ள வீட் பெல்ட் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆய்வாளர் பார்பரி இதை கொண்டுவந்து ஆய்வகத்தில் வைத்து பராமரித்து வந்தார்.

இந்த நிலையில், அந்த சிலந்திப் பூச்சி தனது 43 ஆவது வயதில் இறந்துள்ளது. இத்தத் தகவலை ஆஸ்திரேலியாவின் கர்டின் பல்கலைக்கழக பூச்சியியல் துறை பேராசிரியர் லின்டா மாசன் தெரிவித்தார்.

இதற்கு முன்பு மெக்ஸிக்கோவில் டிரான்டுலா என்ற சிலந்திப் பூச்சி 22 ஆண்டுகள் உயிருடன் இருந்து சாதனை படைத்தது. அதை இந்தச் சிலந்தி முறியடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# கிம் ஜாங் அன் - ட்ரம்ப் சந்திப்பு சிங்கப்பூரில்?

வொஷிங்டன், மே 02

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் அன் - ஆகியோரின் சந்திப்பு சிங்கப்பூரில் நடைபெறலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பரம விரோதிகளாக இருந்து வந்த தென்கொரியா – வடகொரியா ஜனாதிபதிகள் பல ஆண்டுகளுக்கு பின்னர் நேருக்குநேர் சந்தித்துப் பேசிய உச்சி மாநாடு சமீபத்தில் நடைபெற்றது.

இதற்கு முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் அன் ஆகியோர் நேருக்கு நேர் சந்தித்துப் பேச ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. ஆனால், இந்தச் சந்திப்பு நடைபெறும்



திகதி மற்றும் இடம் ஆகியவை இன்னும் முடிவு செய்யப்படாமல் உள்ளது.

இதற்கிடையே, வடகொரியா – தென் கொரியா ஜனாதிபதிகள் சந்தித்துப் பேசிய பன்முன்ஜோம் எல்லைப்பகுதியில் உள்ள 'பீஸ் ஹவுஸ்' என்ற கட்டிடத்தில் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் அன் - னை சந்தித்துப் பேச ட்ரம்ப் விருப்பம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மற்றும் வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் அன்– ஆகியோரின் சந்திப்பு சிங்கப்பூரில் நடைபெறலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக மூத்த அமெரிக்க அதிகாரிகள் கூறுகையில் –

ட்ரம்ப் – கிம் சந்திப்புக்காக பல்வேறு நாடுகளின் பெயர்கள் பரிசீலனையில் உள்ளன. ஆனால், இவர்கள் சந்திப்பு சிங்கப்பூரில் நடைபெற அதிகம் வாய்ப்புள்ளது. சந்திப்பு குறித்த தகவல்கள் இறுதி செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளனர்.

# சுவிஸின் ஆல்ப்ஸ் மலை சூறாவளியில் சிக்கி 6 பேர் பலி!

சுவிற்சர்லாந்தின் ஆல்ப்ஸ் மலையில் மோசமான வானிலையால் ஏற்பட்ட சூறாவளியில் சிக்கி மலையேற்ற வீரர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆல்ப்ஸ் மலையில் தற்போது நிலவும் வானிலையால், பல்வேறு வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வந்து குவிகின்றனர்.

இதேவேளை, சுவிற்சர்லாந்து நாட்டின் ஆப்ல்ஸ் மலையில் மலையேற்ற வீரர்கள் மற்றும் சாகச வீரர்கள் ஒரு குழுவாக பறந்து கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் ஆல்ப்ஸ் மலையில் இத்தாலி, பிரெஞ்சு மற்றும் ஜேர்மன் நாட்டை சேர்ந்தவர்கள் சிலர் பறந்து செல்லும் சாகச விளையாட்டில் ஈடுபட்டனர். மேலும் சிலர் ஒரு குழுவாக மலை யேறிக் கொண்டிருந்தனர். அப்போது மோசமான வானிலையால் சூறாவளி காற்று வீசியது. இதில் மலையேற்ற வீரர்கள் சிக்கிக் கொண்டனர். தகவல் அறிந்ததும் மீட்பு குழுவினர் அங்கு விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். பனியில் சிக்கிய பறக்கும் வீரர்கள் மற்றும் மலையேற்ற குழுவைச் சார்ந்தவர்களை மீட்டனர். இதில் 6 பேர் பலியாகினர். மேலும் 5 இற்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலும் பலரை தேடும் பணி நடந்து வருகிறது.

# இந்தியா சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளுக்குப் பின்னர் அனைத்து கிராமங்களும் மின்மயம்; மோடி பெருமிதம்

புதுடில்லி, மே 02


இந்தியாவின் அனைத்து கிராமங்களுக்கும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டு விட்டது என பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மணிப்பூரின் லீசாங் கிராமத்தை மின்சாரம் சென்றடைந்ததைத் தொடர்ந்து, நாட்டின் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் என்ற இலக்கை, நம் நாடு சுதந்திரம் அடைந்த 70 ஆண்டுகளுக்குப் பிறகு எட்டியுள்ளது.

இந்த இலக்கு, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்கு 12 நாள் முன்னதாக எட்டப்பட்டுள்ளது என்றும் பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி வரலாற்றுச் சிறப்பு மிகுந்த நாளாகும். இந்தியர்கள் பலரின் வாழ்க்



கையில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு கடமையை நாம் நிறைவேற்றியுள்ளோம். இந்தியாவின் ஒவ்வொரு கிராமமும் தற்போது மின்சார இணைப்பு பெற்றுள்ளது என்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் பா.ஜ.க. தலைமையிலான அரசு மத்தியில் பதவி ஏற்கும்போது, 18 ஆயிரத்து 452 கிராமங்கள் மின்சார வசதி பெறாமல் இருந்தன. மக்கள் தொகை பதிவேட்டின்படி நாட்டின் 5 லட்சத்து 97 ஆயிரத்து 464 கிராமங்களுக்கும் தற்போது மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மணிப்பூரின் லீசாங் போன்று நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான கிராமங்கள், மின்சாரமும் அதிகாரமும் பெறச் செய்துள்ளோம். இந்தச் செய்தி ஒவ்வொரு இந்தியரையும் பெருமிதமும் மகிழ்ச்சியும் பெறச் செய்யும் என்று பிரதமர் மற்றொரு டுவீட்டில் கூறியுள்ளார்.

## திருநங்கைகளுக்கான அழகிப்போட்டி; சென்னையை சேர்ந்த மொபினா தேர்வு



விழுப்புரம், மே 02

விழுப்புரத்தில் நடந்த திருநங்கைகளுக்கான அழகிப்போட்டியில் 'மிஸ் கூவாகமாக' சென்னையைச் சேர்ந்த மொபினா தேர்வு செய்யப்பட்டார்.

விழுப்புரம்மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கூவாகம் கிராமத்தில் பிரசித்தி பெற்ற கூத்தாண்டவர் கோவிலில் சித்திரை திருவிழா நடந்து வருகிறது.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான திருநங்கைகள் விழுப்புரம் மற்றும் கூவாகம் கிராமத்திற்கு வந்துள்ளனர்.

இவர்களை மகிழ்விக்கும் வகையில் நேற்றுமுன்தினம் காலை விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடன நிகழ்ச்சிகள் மற்றும் 'மிஸ் கூவாகம்' அழகிப் போட்டி நடைபெற்றது.

இதில் சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த திருநங்கை மொபினா 'மிஸ் கூவாகமாக' தேர்வு செய்யப்பட்டார்.

அவரை தொடர்ந்து 2 ஆவது இடத்தை சென்னை போரூரை சேர்ந்த பிரீத்தியும், 3 ஆவது இடத்தை ஈரோட்டை சேர்ந்த சுபஸ்ரீயும் பிடித்தனர். இவர்களுக்கு கிரீடம் அணிவிக்கப்பட்டு பரிசு வழங்கப்பட்டது.

'மிஸ் கூவாகமாக' தேர்வு செய்யப்பட்ட மொபினா என்ஜினீயரிங் படித்துள்ளார். இவர் சென்னையில் உள்ள ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மதுக் கடைகளை மூடும் உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு!



நெடுஞ்சாலைகளில் உள்ள மதுக் கடைகளை மூடும்படி சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு நேற்று உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள மதுக் கடைகளை மூடும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து தமிழகத்தின் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள மதுக்கடைகள் மூடப்பட்டன. பின்னர் அந்த கடைகளை வேறு இடங்களில் மாநில அரசு திறந்தது.

இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளை உள்ளாட்சி சாலையாக அறிவிக்காமல் திறக்கப்பட்ட மதுக்கடைகளை மூட உத்தரவிட்டது.

நெடுஞ்சாலைகளில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள மதுக்கடைகளை மூட வேண்டும் என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தது.

இந்த நிலையில், உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் நேற்று மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

அதில், நெடுஞ்சாலைகளில் இருந்து 500 மீற்றர் தொலைவிற்குள் உள்ள கடைகளை முட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருப்பதால் 815 கடைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என தமிழக அரசு தெரிவித்தது.

## காவிரி பிரச்சினை; பாதுகாப்பு வலயத்தில் மெரீனா!



சென்னை, மே 02

காவிரி போராட்ட பீதி காரணமாக மெரீனா கடற்கரையில் தினமும் 400 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்காத மத்திய அரசை கண்டித்து தமிழகம் முழுவதும் கடந்த மாதம் போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்றன.

மெரினா கடற்கரையில் ஜல்லிக்கட்டுக்காக ஒன்று கூடியது போல காவிரி பிரச்சினைக்காகவும் இளைஞர்கள் போராட்டம் நடத்தப்போகின்றனர் என தகவல் பரவியது. இதனால் கடற்கரை முழுவதும் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜம்மு - காஷ்மீரில் 8 அமைச்சர்கள் பதவியேற்பு; துணை முதல்வராகிறார் சபாநாயகர் கவீந்தர்!

ஜம்மு - காஷ்மீரில் சட்டப் பேரவை சபாநாயகர் கவீந்தர் குப்தா உள்ளிட்ட 8 பேர் மாநில அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

இதில், கவீந்தர் குப்தா மாநிலத் துணை முதல்வராக பொறுப்பேற்றுள்ளார்.

ஜம்மு – காஷ்மீரில் முதல்வர் மெகபூபா முப்தி தலைமையில் மக்கள் ஜனநாயகக் கட்சி (பி.டி.பி.) - பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. மொத்தம் 25 பேர் கொண்ட அம்மாநில அமைச்சரவையில் பி.டி.பி சார்பில் 14 அமைச்சர்களும், பா.ஜ.க. சார்பில் 11 அமைச்சர்களும் இருந்தனர்.

இந்தநிலையில், கதுவா சிறுமி பலாத்கார குற்றவாளிகளுக்கு ஆதரவு தெரிவித்ததாகக் கூறி, தங்கள் மீது அவதூறு பரப்பப்படுவதைக் கண்டித்து, பா.ஜ.கவைச் சேர்ந்த லால் சிங், சந்தர் பிரகாஷ் கங்கா ஆகிய இரண்டு அமைச்சர்களும் அண்மையில் இராஜிநாமா செய்தனர்.

இதையடுத்து, அமைச்சரவையில் பா.ஜ.க. அமைச்சர்களின் எண்ணிக்கை குறைந்தது. இதன் தொடர்ச்சியாக, அங்கு துணை முதல்வராக



இருந்த பா.ஜ.கவின் நிர்மல் சிங்கும் கடந்த ஞாயிற்றுக் கிழமை தனது பதவியை திடீரென இராஜிநாமா செய்தார்.

அமைச்சரவையில் புதியவர்களுக்கு இடம் அளிக்கும் விதமாக, அவர் ராஜிநாமா செய்தார் என பா.ஜ.க .தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து, ஜம்மு - காஷ்மீர் அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டது.

## திருவள்ளூர் மாவட்டத்தில் 4 மாதங்களில் 40 இளம்பெண்கள் மாயம், 34 பேர் மீட்பு!

திருவள்ளூர், மே.02

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 4 மாதங்களில் காணாமற்போன 40 இளம்பெண்களில் 34 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என திருவள்ளூர் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்ட பொலிஸின் கீழ், திருவள்ளூர், திருத்தணி, ஊத்துக்கோட்டை, பொன்னேரி, கும்மிடிப்பூண்டி ஆகிய 5 உப கோட்டங்கள் உள்ளன. இந்த உப கோட்டங்களின் கீழ், 29 பொலிஸ் நிலையங்கள் உள்ளன.

இந்த பொலிஸ் நிலையங்களில், ஏதாவது ஒரு பொலிஸ் நிலையத்தில் ஒன்று அல்லது 2 நாளுக்கு ஒருமுறை ஓர் இளம்பெண் [illegible] வழக்கமாக உள்ளது. அந்த எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்து வருகிறது எனக் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில், திருவள்ளூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக இளம் பெண்கள் அதிக அளவில் காணாமல் போயுள்ளனர் எனச் சமூக வலைதளங்களில் கடந்த சில நாள்களாக தகவல்கள் பரவிவருகின்றன.

இந்நிலையில், திருவள்ளூர் மாவட்ட எஸ்.பி யான சி.பி. சக்ரவர்த்தி நேற்றுமுன்தினம் மாலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்–

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 4 மாதங்களில் 40 இளம் பெண்கள் காணாமல் [illegible] செய்யப்பட் டுள்ளன. அவர்களில் 34 பேர் கண்டுபிடிக்கப்பட்டு, பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மீதமுள்ள 6 பேரை விரைந்து, கண்டுபிடிக்க காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. காணாமற் போகும் இளம் பெண்களில் ஒரு பிரிவினர், தேர்வு தோல்வி பயத்தில் வீட்டிருந்து வெளியேறி உறவினர்கள் வீடுகளில் தங்குவதும், சிலர் காதலர்களோடு செல்வதும் கண் டுபிடிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் பரவி வரும் தவறான தகவல்களை கண்டு பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(சு)

## மோசடிகளுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பார்க்கப்படும். முறைகேடுகள் தொடர்பாக மாநகர முதல்வர் சட்டத்தின் முன் பதிலளிக்க வேண்டும்.

–இவ்வாறுதெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன்.

கொக்குவிலில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில்நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்தப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாநகர சபையில் மாநகர முதல்வர் ஆர்னோல்டினால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகள், மோசடிகள் தொடர்பாக நாம் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும் முதலமைச்சருமான சி.வீ.விக்னேஸ்வரனிடம் முறைப்பாடு செய்திருந்தோம். இது தொடர்பாக நாம் தன்னுடனேயே பேசியிருக்க முடியும் எனவும், நாம் அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் இதனை மேற்கொண்டோம் எனவும் மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாம் தெளிவுபடுத்தவேண்டியுள்ளது. நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாநகர முதல்வரது செயற்பாடுகளை குழப்புவதற்கு முயற்சிக்கவில்லை. நாம் தேர்தலில் போட்டியிடும்போதே 'தூய கரங்கள்', 'தூய நகரங்கள்' என்ற தொனிப்பொருளில் போட்டியிட்டோம். தேர்தலின் பின்னரும் யாழ்.மாநகர சபையில் இடம் பெறும் மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்போம் எனவும், ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றமை தொடர்பாகக் கண்காணிப்போம் எனவும் கூறியிருந்தோம்.

மாநகரசபைச் சட்டத்தின் 26ஆம் பிரிவு உபபிரிவு 01 இன் படி மாநகர சபையின் முதலாவது கூட்டத்திலேயே நிதி மற்றும் மேலும் இரு உப குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. முதலமைச்சரிடம் இது தொடர்பாக முறையிடுவதற்கு முன்பே மாநகர சபையில் உப குழுக்கள் எவையும் நியமிக்கப்படாத நிலையில் அவற்றை நியமிக்குமாறும், அதற்காக விசேட கூட்டமொன்றை கூட்டுமாறும் கடிதம் மூலம் முதல்வரிடம் கோரியிருந்தோம். ஆனால் அந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்குப் பணம் விரயமாகும் என்ற வேடிக்கையான காரணத்தை முதல்வர் கூறினார். உண்மையில் அந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு 4ஆயிரத்து 500 ரூபா பணம் கூடச் செலவாகாது.

இரண்டு மாநகரசபைக் கூட்டங்கள் நடந்துவிட்டபோதிலும் இன்னமும் உப குழுக்களை அமைக்காது மாநகரசபை சாதாரண ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளும், சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளும் சபையின் அங்கீகாரம் இன்றியே வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று சபையின் அங்கீகாரம் இன்றி முதல்வரின் பெயரால் கேள்வி கோரல் விளம்பரங்கள் பத்திரிகையில் செய்யப்பட்டுள்ளன. அதில் எந்தவிதமான குழுக்களும் நியமிக்கப்படாத நிலையில் பொய்யாகப் பெறுகைகள் குழு எனப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டமானது மாநகரசபை ஆரம்பிக்க முன்னர் ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட நிலையில் அதில் புனரமைப்புக்காகப் பெயர் குறிக்கப்பட பல வீதிகளில் தற்போது சபையின் எந்தவிதமான அங்கீகாரமும் இன்றிப் பதினெட்டு வீதிகளைப் புனரமைப்பதற்கான கேள்வி கோரல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வீதிகளைத் தேர்வு செய்தவர்கள் யார் ?

இவ்வாறான செயற்பாடுகள் யாழ்.மாநகரத்தில் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெறப்போகின்றமையையே எடுத்துக்காட்டுகின்றன. மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தேர்வு செய்யப்படாத ஒருவரை முதல்வர் மாநகர சபையின் இலச்சினை பொறிக்கப்பட்ட கடிதத்தின் ஊடாகத் தனது இணைப்பாளராக நியமித்துள்ளார். இவ்வாறான செயற்பாட்டுக்கான அனுமதி எந்தச் சட்டத்தில் உள்ளது என்பதை முதல்வர் தெரிவிக்க வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சுமந்திரன் உள்ள நிலையில் சட்ட ரீதியான ஆலோசனைகளைப் பெற்றிருந்தாலும் அவற்றை புறம்தள்ளி இந்தச் செயற்பாடுகள் மாநகர முதல்வரால் தன்னிச்சையாக எதேச்சாதிகாரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. – என்றார். (ஐ -7)

## விஜயதாஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டு அரசின் மூன்றாவது அமைச்சரவை மறுசீரமைப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அமைச்சர் விஜயதாஸ கடந்த காலங்களின் அரசின் கொள்கைகளைக் கடுமையாக விமர்சித்து வந்தார். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனத்துக்கும் வழங்கும் அரசின் முடிவையும் அவர் விமர்சித்தார்.

அதனால் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுமாறு அரசுக்குள்ளேயே கடும் அழுத்தம் அவருக்கு வழங்கப்பட்டது. அது தொடர்பில் பிரதமரால் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நீதி மற்றும் புத்த சாசன அமைச்சர் பொறுப்பிலிருந்து விஜயதாஸ ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஒகஸ்ட் மாதம் நீக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இப்போது அவருக்கு உயர்கல்வி அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அறிவித்துள்ளது.

நல்லாட்சி அரசின் மூன்றாவது அமைச்சரவை மறுசீரமைப்பு நேற்று ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. 18 பேருக்குப் புதிய அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி நேற்று வழங்கினார்.

ஏனைய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் முன்னரைப் போன்றே தொடர்ந்தும் செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் பதவிப்பிரமாணம் செய்து கொள்ள உள்ளனர்.(ஐ)

## நடன..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறுப்பினர்கள் இருவரை எச்சரித்த நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, இனி எந்தப் பிரச்சினையும் இடம்பெறாது எனத் தெரிவித்திருந்தார் என்ற விடயம் பொலிஸாரின் விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் நடன ஆசிரியையின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த வாள்வெட்டுக் கும்பல், ஆசிரியையும் அவரது தாயாரையும் கடுமையாகத் தாக்கியிருந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

வாள்வெட்டுக் கும்பலின் இலக்கு ஆசிரியையின் சகோதரிதான். ஆனால் அவர் வீட்டுக்குள்ஒளிந்துகொண்டமையால், ஆசிரியையை அந்தக் கும்பல் தாக்கிவிட்டது. ஆசிரியையின் சகோதரியின் கணவரின் முதலாவது மனைவி சுவிஸில் வசிக்கிறார். அவரின் ஏற்பாட்டிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என்று ஆரம்ப விசாரணையின் பின்னர் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் பொலிஸாரின் விசாரணையில் புதிய தகவல் ஒன்றும் கிடைத்துள்ளது.

கொக்குவில் ஆசிரியையின் வீட்டுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் என்று கூறிக்கொண்டு இருவர் சென்றுள்ளனர்.

வெளிநாட்டு அன்ரி சொல்லி வந்தோம் என்று அவர்கள் அச்சுறுத்தும் பாணியில் செயற்பட்டுள்ளனர். அதனை அறிந்த அயலவர்களும் அந்த ஊர் மக்களும் அவர்களில் ஒருவரைப் பிடித்து சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அந்த நபரையும் ஆசிரியையின் சகோதரியையும் அழைத்து சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர் பொலிஸார்.

ஆசிரியையின் வீட்டுகாரர்கள் இந்த விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

அவர்களின் முறைப்பாடு தொடர்பில் சம்பந்தப்பட்ட இருவரையும் அழைத்த நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, அந்தக் குடும்பத்துடன் எந்த தகராறுக்கும் போகக் கூடாது என எச்சரித்திருந்தார்.

அத்துடன், இவ்வாறான எந்த அச்சுறுத்தல்களும் இனி ஏற்படாது எனவும் அந்தக் குடும்பத்தினரிடம் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்திருந்தார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-7)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்று இடம்பெற்றது.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் நெல்லியடி புதிய சந்தைப் பகுதியில் ஆரம்பமான இந்தப் பேரணி, மைக்கல் விளையாட்டு மைதானம் வரை சென்றடைந்தது.

இதன் போது, தமிழரின் உரிமைகள், தமிழ் மக்களின் கோரிக்கைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் போன்றவற்றைப் பிரதிபலிக்கும்வாகன ஊர்திகளும் பேரணியில் பங்கேற்றன.

இந்தப் பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன், யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் ஆர்னோல்ட், மாகாண சபை உறுப்பினர்கள், நகர மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பங்காளிக்கட்சிகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பெரும் திரளானோர் பங்கேற்றனர் (ஐ-7)

## பிள்ளைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்தச் சம்பவம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் நேற்று முன் தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது.

தந்தையும் 2 பிள்ளைகளும் யாழ். போதனா வைத்திய சாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

37 வயதுடைய குடும்பத் தலைவர், மனைவியைப் பிரிந்து வாழ்கிறார். அண்மையில் அவரது மனைவி மண நீக்கம் கோரியுள்ளார்.

குடும்பத்தலைவர் நேற்று முன்தினம் இரவு தனது பிள்ளைகளான 10 வயது மகனுக்கும் 7 வயது மகளுக்கும் உணவில் கிருமிநாசினி கலந்து கொடுத்துத் தானும் உட்கொண்டுள்ளார்.

இதனை, அயலிலுள்ள உறவினர்கள் அறிந்து மூவரையும் மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர்.

அங்கிருந்து ஒவ்வொருவராகத் தனித் தனி அம்புலன்ஸில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு தந்தை மற்றும் பிள்ளைகள் இருவருக்கும் சிகிச்சை வழங்கப்படுகிறது.

தற்போது அவர்கள் மூவரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக நேற்றுக் காலை மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஐ-7)

## மனோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைச்சர் மனோ கணேசனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிச் செயலகத்தில் நேற்றுக் காலை புதிய அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். இதன்போதே தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசனுக்குப் புதிய அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மனோ, ஜனாதிபதியின் பொறுப்பிலிருந்து தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும். அவ்வாறு வந்தவுடன் அந்த அமைச்சுப் பதவி தொடர்பான தகவல்களை அறிந்து கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

முன்னதாகவே எனது அமைச்சுப் பதவிக்கு வழங்கப்பட்ட நிதி தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்பட்டன. தற்போது ஜனாதிபதியின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சுப் பதவி எனக்கு வந்துள்ளதால் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியும் எனது அமைச்சுக்கே வரும்.

ஆகவே இதை நல்ல முறையில் பயன்படுத்தி மக்களுக்குச் சிறந்த சேவைகள் முன்னெடுக்கப்படும். – என்றார். (ஐ)

## பொன்சேகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தும பண்டாரவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில், அவர் பதவிப்பிரமாணம் செய்தார்.

அத்தோடு, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு நிலையான அபிவிருத்தி, வனவிலங்கு மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## நினைவாலயத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) லும்மனிதாபிமற்றசெயற்பாடும் ஆகும். இந்தச் செயற்பாடு ஏற்றுக்கொள்ள முடியாதது; கண்டிக்கத்தக்கது என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். தெரிவித்துள்ளது.

போரில் தமது உறவுகளை நினைவு கூருவதற்கு மக்களுக்கு இருக்கும்சுதந்திரத்தைத் தடுக்கும் செயலாக இதைப் பார்க்கவேண்டும். இளைஞர்கள் மத்தியில் விரக்தி – கோபம் – அரசுக்கு எதிரான சிந்தனைகளை உருவாக்குவது எல்லாமே இவ்வாறான அடக்குமுறைகள் தான் என்று ஈ.பி.ஆர்.எல். எவ்வின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் தமிழ் மக்களின்பாரம்பரியத்தலைநகரம். தமிழ் மக்கள் தமக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் எனப் போராடிப் பெற்றுக்கொண்டது தான் யாழ். பல்கலைக்கழகம்.

தமிழ் மக்களின் உரிமைகளை – கலாசாரத்தை – பொருளாதார வளங்கள் – வரலாறுகளைப் போதிக்கின்ற, போற்றிப் பாதுகாக்கின்ற அமைப்பாகத் தான் யாழ். பல்கலைக்கழகம் திகழ்கின்றது.

அவ்வாறானதொரு பல்கலைக்கழகத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நினைவாலயம் அமைப்பதை அரசு – பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு – தடுப்பதைக் கட்டாயமாக கண்டிக்க வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதற்கான நிதியை வழங்க மறுத்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால்நினைவாலயமே கட்ட முடியாது எனக் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

போரால் பல லட்சம் உறவுகளை இழந்த மக்கள், ஒரு வருடத்துக்கு ஒரு முறை தமது உறவுகளுக்கு நினைவுகூர தமது மண்ணில் உள்ள பல்கலைக்கழகத்தில் நினைவாலயம் அமைப்பதைத் தடுப்பது அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயற்பாடாகும்.

போரில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவதற்கு முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தபோது, ஐ.நா. அமைப்புக்கள் எதிர்ப்பு வெளியிட்டன. அவ்வாறு தடை செய்வது அடிப்படை உரிமை மீறல் என்பதை அவை சுட்டிக்காட்டின.

யாழ். பல்கலைக்கழகப் பேரவை, ஆசிரியர் சங்கம், மாணவர்கள் ஒன்றியம் உள்ளிட்ட யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து அமைப்புக்களும் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைக்கும் விடயத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய நல்லதொரு முடிவை எட்ட அழுத்தத்தை வழங்குவார்கள் என நம்புகின்றேன். –என்றார். (ஐ-7)

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் மேல் மாகாணம் உள்ளிட்ட சில மாகாணங்களின் அபிவிருத்திக்குத் தனியாக அமைச்சு அமைக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாண அபிவிருத்திக்கு நேற்றைய அமைச்சரவை மறுசீரமைப்பில் புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு அபிவிருத்தி, இந்து சமயவிவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சராக டி.எம்.சுவாமிநாதன் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றார். (ஐ)

# ப்ரீத்தி ஜிந்தா கையில் வெற்றிக் கிண்ணம்

## கெயிலின் இலக்கு இது

2018 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் வெற்றி கிண்ணத்தை பஞ்சாப் உரிமையாளர் ப்ரீத்தி ஜிந்தாவுக்குப் பெற்றுக் கொடுப்பதே தனது இலக்கு என அதிரடி வீரர் கிரிஸ் கெயில் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் போட்டிகளின்போது பெங்களூர் அணிக்கு என்னைத் தேர்வு செய்யாதமையால் மிகுந்த ஏமாற்றம் அடைந்திருந்தேன் என ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் இதனைக் கூறினார்.

10 ஆவது ஐ.பி.எல் சீசனில் என்னை பெங்களூர் அணிக்குத் தக்கவைத்து கொள்வதாக நிர்வாகத்தினர் முடிவு செய்தனர். இருப்பினும் கரீபியன் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய என்னை



தேர்வு செய்யாமல் விட்டமை பெரும் ஏமாற்றத்தைக் கொடுப்பதாக இருந்தது. தற்போது பஞ்சாப் அணிக்காக விளையாடுவதானது மிகுந்த மகிழ்ச்சி..

அணியின் உரிமையாளர் ப்ரீத்தி ஜிந்தா அணி மீதும், அணியின் வீரர்கள் மீதும் கொண்டுள்ள மரியாதையும், அனைத்து போட்டிகளிலும் வீரர்களுக்கு உற்சாகத்தை வழங்குவதும் ஆச்சரியமாக உள்ளது. எனவே அவருக்காக, இந்த வருடம் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொடுப்பதே தனது இலக்கு.- என்றார் கெயில்.

பஞ்சாப் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக கெயில் மற்றும் ராகுல் களமிறங்கிச் சிறந்த இணைப்பாட்டத்தையும் அதிரடியையும் வெளிப்படுத்தி வருகின்றமையுடன், தரப்படுத்தலில் பஞ்சாப் அணி 10 புள்ளிகளுடன் 3 ஆம் இடத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# முடிசூடியது பார்சிலோனா

ஸ்பானிய உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில் சம்பியனாக பார்சிலோனா முடி சூடியுள்ளது. டெபோர்ட்டிவோ லா கொரனா அணியின் மைதானத்தில் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற அவ்வணியுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே லா லிகாவில் 25ஆவது தடவையாகப் பார்சிலோனா சம்பியனாகியது.

இப்போட்டியின் ஏழாவது நிமிடத்திலேயே, உஸ்மான் டெம்பிலி கொடுத்த பந்தை பிலிப் கோச்சினியோ கோலாக்க முன்னிலை பெற்ற பார்சிலோனா, 38ஆவது நிமிடத்தில் லூயிஸ் சுவாரேஸ் கொடுத்த பந்தை லயனல் மெஸ்ஸி கோலாக்கத் தமது முன்னிலையை இரட்டிப்பாக்கிக் கொண்டது.

எனினும் அடுத்த இரண்டாவது நிமிடத்தில் லூக்காஸ் பெரேஸ் பெற்ற கோலின் மூலம் பார்சிலோனாவின் முன்னிலையை டெபொர்ட்டிவோ லா கொரனா ஒன்றாகக் குறைத்துக் கொண்டதுடன் போட்டியின் 64ஆவது நிமிடத்தில் எம்ரே கொலக் பெற்ற கோலின் மூலம் கோலெண்ணிக்கையை டெபோர்ட்டிவோ லா கொரனா சமப்படுத்திக் கொண்டது.

எவ்வாறெனினும், போட்டியின் 82ஆவது நிமிடத்திலும் 85ஆவது நிமிடத்திலும் மாற்று வீரராகக் களமிறங்கிய டெனிஸ் சுவாரஸ் கொடுத்த பந்தை லயனல் மெஸ்ஸி கோலாக்க, இறுதியில் 4-2 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்று கொண்டது.

இப்பருவகால இறுதியுடன் பார்சிலோனாவிலிருந்து விலகுவதாக கடந்த வாரம் அறிவித்த பார்சிலோனா அணியின் தலைவர் அன்ரே இனியஸ்டா, இப்போட்டியின் இறுதி மூன்று நிமிடங்களில் மாற்று வீரராகக் களமிறங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அனுஷ்காவுக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் சொன்ன கோஹ்லி

திருமணத்திற்குபிறகு அனுஷ்கா சர்மா, கணவர் விராட் கோஹ்லியுடன் தனது முதல் பிறந்தநாளை நேற்றுக் கொண்டாடினார்.

இந்தப் பிறந்தநாள் கொண்டாட்ட புகைப்படத்தை கோஹ்லி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில் அனுஷ்காவுக்கு இனிப்பு ஊட்டி விடுகிறார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் எனது அன்பே....நீ மிகவும் நேர்மையானவள். நேர்மையான எண்ணங்களைக் கொண்டவள் என்பது எனக்குத் தெரியும். ஐ லவ் யூ எனப் பதிவிட்டுள்ளார்.





# டேவிட் வோர்னர் மீண்டும் வரலாம்!

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் துணைத் தலைவர் டேவிட் வோர்னர் மீண்டும் தனது பதவிக்கு வரலாம் என கிரிக்கெட் ஆஸ்திரேலியாவின் தலைவர் ஜேம்ஸ் சதர்லேண்ட் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய மற்றும் தென்னாபிரிக்காவுக்கு இடையிலான போட்டின் போது பந்தினைச் சேதப்படுத்தியமை காரணமாக முன்னாள் தலைவர் ஸ்ரிவ் ஸ்மித் மற்றும் துணைத்தலைவர் டேவிட் வோர்னர், கமரூன் பாங்க் ராப்ட் ஆகியோருக்கு ஒரு வருடம் மற்றும் 9 மாதங்களுக்கும் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் டேவிட் வோர்னர் அடுத்த 2 வருடங்களுக்கு தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியற்றவர் எனத் தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக மனம் வருந்திய வோர்னர் ஆஸ்திரேலிய அணிக்காக விளையாடப்போவதில்லை என அறிவித்திருந்தார்.

ஆனால், தற்போது தடை செய்யப்பட்ட வீரர்கள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு மீண்டும் வருவதற்கான வாய்ப்பு உள்ளதாகக் கிரிக்கெட் ஆஸ்திரேலியாவின் தலைவர் ஜேம்ஸ் சதர்லேண்ட் கூறியுள்ளார்.

தடை காலங்களில் தங்களது திறமைகளை வெளிகொண்டு வருவது அவர்களது கையில் தான் உள்ளது, எனவே அவர்கள் திறமையை வெளிக்காட்டினால் மீண்டும் ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடிக்க வாய்ப்பு உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நிசாந்த ரணதுங்க போட்டி

ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவர் பதவிக்காக நிசாந்த ரணதுங்க போட்டியிடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



நிசாந்த ரணதுங்க ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் செயலாளர் என்பதுடன், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுண ரணதுங்கவின் சகோதரராவார்.

இந்த நிலையில் இந்த மாதம் 19ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவிக்கான தேர்தலானது பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆக்ரோஷத்துடன் விளையாடும் டோனி!

இத்தனை வருடங்களில் இல்லாத அளவுக்கு இந்த வருட ஐ.பி.எல். போட்டியில் அதிரடியாக விளையாடி வருகிறார் டோனி.

8 ஆட்டங்களில் 3 அரை சதங்கள் உள்ளிட்ட 286 ஓட்டங்கள் எடுத்து அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களின் பட்டியலில் 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இதுவரை 20 சிக்ஸர்கள் அடித்துள்ளார்.

வேறு எந்த வருடத்தை விடவும் இம்முறை அதிக துடுப்பாட்டச் சராசரி வைத்துள்ளார் டோனி. இதற்கு முன்பு 2013 இல் 162.89 துடுப்பாட்டச் சராசரி வைத்திருந்தார். அந்த வருடம்



டோனி 4 அரைச் சதங்களும் எடுத்திருந்தார். ஆனால் இந்தமுறை டோனியின் துடுப்பாட்டச் சராசரி 169.23. டில்லிக்கு எதிரான நேற்றுமுன்தினம் ஆட்டத்தில், 5 சிக்ஸர், 2 பவுண்டரியுடன், 22 பந்துகளில் 51 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார் டோனி.

2011 இல் 23, 2013 இல் 25, 2014 இல் 20 சிக்ஸர்கள் அடித்துள்ளார் டோனி (இதர வருடங்களில் 20 இற்கும் குறைவாகவே சிக்ஸர்கள் அடித்துள்ளார்.) ஆனால் 20+ சிக்ஸர்கள் அடிக்க குறைந்தபட்சம் 16 ஆட்டங்களாவது டோனிக்குத் தேவைப்பட்டன. ஆனால் இந்தமுறை எட்டே ஆட்டங்களில் 20 சிக்ஸர்கள் அடித்து அசத்தியுள்ளார் டோனி.

இந்த அசத்தலான, அதிரடியான துடுப்பாட்டைத்தை ரசிகர்களும் நிபுணர்களும் புகழ்ந்து வருகிறார்கள். பழைய டோனியை மீண்டும் காண்பது போல இருக்கிறது என்று ரசிகர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

சென்னை அணி மற்றும் அதன் ரசிகர்கள் மீது அளவு கடந்த பாசம் வைத்துள்ளார் டோனி. தனது இரண்டாவது தாய் வீடு என்று சென்னையை அடிக்கடிக் குறிப்பிடுவார். இரு வருடங்கள் கழித்து சென்னை அணி மீண்டும் ஐ.பி.எல். போட்டியில் களமிறங்குவதால் சென்னை ரசிகர்களை அதிகம் மகிழ்விக்கவேண்டும் என எண்ணியுள்ளார் டோனி.

அதனால் இந்த முறை அவருடைய துடுப்பாட்டம் கூடுதல் ஆக்ரோஷத்துடன் மிளிர்கிறது. மேலும் கடந்த சில மாதங்களாக டோனியின் துடுப்பாட்டம் குறித்து பல கேள்விகள் எழுந்துள்ளன.

இந்த விமர்சனங்களுக்கான பதிலடியையும் இந்த ஐ.பி.எல்லில் தந்து வருகிறார் டோனி.

Delhi Daredevils v Rajasthan Royals

இன்று
02.05.2018
இரவு 8.00 மணி



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மேதின ஊர்வலம் நேற்று மாலை நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலில் ஆரம்பமாகி கிட்டு பூங்காவைச் சென்றடைந்தது. கட்சியின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-7)



ஜே.வி.பியின் மே தினப் பேரணி நேற்று யாழ்.நகரில் நடைபெற்றபோது.....



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினப் பேரணி வடமராட்சியில் நேற்றுப் பிற்பகல் முன்னெடுக்கப்பட்டது. நெல்லியடி புதிய சந்தைப் பகுதியில் ஆரம்பமான பேரணி மாலி சந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-7)



கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் வளாகத்தில் சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் மே தினம் முன்னாள் எம்.பி. சந்திரகுமார் ஏற்பாட்டில் நேற்று நடந்தபோது...



கிளிநொச்சி முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதான வளாகத்தில் ஸ்ரீதரன் எம்.பியின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வு நேற்று நடந்தபோது...




## மாபெரும் தமிழ்ப் புத்தாண்டு பரிசு மழை




ரூ.4 ஆயிரத்துக்கு மேல் பெறுமதிக்கு கொள்வனவு செய்த அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை வெகுசிறப்பன நடைபெற்றபோது...